பொது...
யாழ்ப்பா...
...யாத்துறைப் படிப்பக...

லை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்...
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 15 செவ்வாய்க்கிழமை (01.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 286

## தலைவரின் அர்ப்பணிப்பு; மாவீரர்களின் தியாகம்

# தமிழீழத் தேசத்தின் மீது இன்று உலகின் பார்வை திரும்பியுள்ளது

## மகளிர் மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன்



தமிழீழப் பெண்கள் மேம்பாட்டுப் ...வையின் தேசிய மகளிர் எழுச்சி ...நாடு கிளிநொச்சியில் நடைபெற

இம் மாநாட்டில் கலந்து கொண்டு ...ரையாற்றிய தமிழீழ விடுதலைப்

(கிளிநொச்சி நிருபர்)

அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளிற்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் முக்கிய அம்சங்களை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்,

அர்ப்பணிப்பும், தியாகமும் நிறைந்து பெற்ற இச் சூழலை நாம் மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அம் மாநாட்டில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

உலகப் பந்தில் ஒரு சிறு புள்ளியாகக் காட்சியளிக்கும் எமது தேசம் இன்று உலக நாடுகள் முழுவதும் உற்றுப் பார்க்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு எமது தேசியத் தலைவரின் வழிநடத்தலும் அவரது தீர்க்க தரிசனமான செயற்பாடுகளும், 17ஆயிரத்து அறுநூற்றுக்கு மேற்பட்ட எமது மாவீரர்களின் அர்ப்பணிப்புமே காரணமாகும்.

ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்த

(10ம் பக்கம் பார்க்க)

## களுத்துறைக் கைதிகள் இன்று முதல் சாகும் வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

எந்தவிதமான நிபந்தனையும் இன்றித் தம்மை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று கோரியே இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தமது நிபந்தனைகளை நிறைவேற்றாமல் அரசியல்வாதிகள் தலையிட்டாலும் ஒருபோதும் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்று கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அரசியல்

(10ம் பக்கம் பார்க்க)

### ஏழு நீதிபதிகள் முன்னிலையில்

## 18,19வது திருத்த சட்ட மூலத்திற்கு எதிரான மனு இன்று விசாரணை

(கொழும்பு)

18,19வது அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ளது.

இவ்விசாரணைகளுக்காக உயர் நீதிமன்ற நீதிபதிகள் 7பேர் கொண்ட குழு ஒன்றை பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா நியமித்துள்ளார்.

பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா எஸ்.டபிள்யூ.டி.வடுகொடபிட்டிய, சானு பண்டாரநாயக்கா, அன்வர் ஸ்மாயில், ரி.எதிரி சூரிய, எச்.ஏ.வி. யாப்பா, அசோக சில்வா ஆகிய நீதிபதிகளே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்களிற்கு எதிராக இன்று நடைபெறவுள்ள விசாரணைகளின் போது அரசமைப்புச் சார்பான வாதங்களை முன்வைக்குமாறு சட்டமா அதிபர்

(10ம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கத்தின் பயணத்திற்கு பாதுகாப்பு வழங்குவது எமது கடமை

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்... அவர் மேலும் தெரிவிக்கையில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முன்னர் ... இணைந்து வன்னிக்குச் செல்லத் தான் தயாராக இருப்பதாகவும் ஒஸ்...

## 14 வருடங்கள் சிறை இருந்த

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ...சியல் ஆலோசகர் கலாநிதி அன் ... பாலசிங்கம் லண்டனில் இருந்து ...ாழும்பு ஊடாக வன்னி செல்வ ...்குரிய பாதுகாப்பை வழங்குவது ...து கடமை என்று பாதுகாப்பு ...மைச்சின் செயலாளர் ஒஸ்ரின் ...ர்னான்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முன்னர் லண்டனில் இருந்து மாலைதீவிற்கு வந்து அங்கிருந்து வன்னிக்கு வந்திருந்தார்.

ஆனால் இம்முறை அவ்வாறு அவர் வன்னி வரத்தேவையில்லை.

கொழும்பிலிருந்து அவர் வன்னிக்குச் செல்வதானால் அவருடன் இணைந்து வன்னிக்குச் செல்லத் தான் தயாராக இருப்பதாகவும் ஒஸ்ரின் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாரம் வன்னிக்கு வருகை தருவார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இம் முறை அவர் லண்டனில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலை

(10ம் பக்கம் பார்க்க)

# 14 வருடங்கள் சிறை இருந்த ஐவருக்கு விடுதலை கிடைத்தது

(திருகோணமலை)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 14 வருடங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 5 பேர் நேற்று திருகோணமலை மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

மேற்படி 5பேர் மீதும் தொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுவதாக அரச சட்டத்தரணி தெரிவித்ததை அடுத்து சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு நீதிவான் ஏ.என்.இராமசந்திரன் உத்தரவிட்டார்.

விடுதலைப்புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றமை, அவர்களுக்கு நிதி சேகரித்தமை, புலிகள் தொடர்

(10ம் பக்கம் பார்க்க)

# மானிப்பாய் வீதியில் கடை எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மானிப்பாய் வீதியில் அமைந்திருந்த ஆசனங்களுக்கு குசன் வைத்து தைக்கும் கடை நேற்றிரவு 9மணியளவில் திடீரென தீப்பற்றியதில் அங்கிருந்த குசன் மற்றும் தோற்பொருட்களும் முழுமையாக எரிந்து சாம்பரானது.

தீ அனர்த்தம் ஏற்பட்டமைக்குரிய காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. அப்பகுதி பொது மக்கள் திரண்டு தீயை அணைக்க முயற்சி எடுத்தனர் .

எனினும் முயற்சி கைகூடவில்லை. முயற்சி கைகூட முன்னர் பொருட்கள் எரிந்து சாம்பரானது.

சம்பவம் குறித்து யாழ் மாநகர சபையின் தீயணைப்புப் படைக்கு தொலைபேசிகள் மூலம் தகவல்கள் கொடுக்கப்பட்ட போதிலும் தகவல் கிடைத்து ஒரு மணித்தியாலத்தின் பின்னர்- கடை எரிந்து முடிந்த பின்பே அவர்கள் ஸ்தலத்திற்கு வருகை தந்தனர். இச்செயல்கள் குறித்து பொது மக்கள் தரப்பில்

(10ம் பக்கம் பார்க்க)


**அன்பு வாசகர்களே!**

**உங்களின்**

**சங்கு நாதம்**

**தவிர்க்க முடியாத**

**காரணத்தினால்**

**இன்று வெளிவரவில்லை**


## "நமது ஈழநாடு" இன்று வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இன்று ...தல் "நமது ஈழநாடு" தினசரிப் ...த்திரிகை வெளிவருகின்றது.

நாட்டின் அபிவிருத்தியில் பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதன் சுழற்சி வேகமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

(10ம் பக்கம் பார்க்க)

## நியமனம் பெற்ற விரிவுரையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் 2002ம், 2003ம் கல்வியாண்டிற்கு சுமார் 150இற்கு மேற்பட்ட தற்காலிக விரிவுரையாளர்கள், பகுதி நேர விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், கட்டுரையாசிரியர்கள் இன்று முதல் நியமனம் பெறவுள்ளனர்.

(10ம் பக்கம் பார்க்க)

**ஐ.சி.சி. கிரிக்கெற் இறுதிப் போட்டி**

# இலங்கை இந்திய அணிகள் வெற்றியைப் பகிர்ந்து கொண்டன

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற ஐ.சி.சி கிண்ணத்திற்கான கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நேற்று இரண்டாவது தடவையாக மழையின் காரணமாக இடைநிறுத்தப்பட்டதுடன் இலங்கை, இந்திய அணிகள் இரண்டும் வெற்றியை பகிர்ந்து கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப ஆட்டக்காரராக களம் இறங்கிய அணித்தலைவர் சனத் ஜெயசூரியா சகீர்கான் வீசிய முதலாவது பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து இலங்கை அணியினர் இந்திய வீரர்களின் அபார பந்து வீச்சை எதிர்கொண்டு அணியின் ஓட்டங்களை அதிகரிக்க செய்

(10ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இல 26 கனகசபை அவெனியூ யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய பூபாலசிங்கம் பிரபானந்தா என்பவருடைய தேசிய அ.அ (இல-753651381 V) யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ராஜ பூபால்' சிவலிங்கப்புளியடி கே.கே.எஸ் றோட் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (5951)

## தவறிவிட்டது

118 மானிப்பாய்வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியை சேர்ந்த ஜெயம் றஞ்சித்காந்த் என்பவருடைய தேசிய அ.அ (இல-731711283 V) விசேட அடையாள அட்டை பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது தொலைபேசி எண் 021-2223427 தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (5949)

## சிறுவர் பேரணி

(கொழும்பு)

மலையகத்தைச் சேர்ந்த 2 லட்சம் சிறுவர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பௌத்தாலோகாவில் சிறுவர் பேரணி நடத்தப்படவுள்ளது. (உ-10)

## நல்லை ஆதீனத்தில் இன்று இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கல மண்டபத்தில் இன்று மாலை 6 மணிக்கு சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் வயலின் சோலோ இசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இவ் இசை நிகழ்வில் வயலின் உ. இராதாகிருஷ்ணன் மற்றும் செல்வி சயந்தவி இராதாகிருஷ்ணன் ஆகியோரும், மிருதங்கம் சிவ. சக்திதரன், கெஞ்சிரா எ. அனந்தகோபன், மோர்சிங் எஸ் இராசா, கடம் தி. வரோதயன் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (இ-5)

# இலங்கைக்கு நிதியுதவி வழங்கக் கோரி யு. என். எச். சி. ஆர். உலகஅளவில் பிரசாரம்

(கொழும்பு)

ஐக்கியநாடுகளுக்கான அகதிகள் தூதுவராலயம் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் பாதுகாப்புக் குறித்தும் அக்கறைகொண்டுள்ளது என அதன் உயர்ஸ்தானிகர் நட்லுப்பெர்ஸ் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு மீளக்குடியேற்றம் அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா அண்மையில் ஜெனிவாவில் வைத்து சந்தித்தவேளை நட்லுப்பெர்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கையின் இருதசாப்தகால இனமோதல் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களை மீளக் குடியேற்றுவதற்கான உதவிகள் குறித்து மாத்திரம் ஐக்கியநாடுகளிற்கான அகதிகள் தூதுவராலயம் கவனம் செலுத்தவில்லை.

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் பாதுகாப்பு என்பது நல்லாட்சி மனிதஉரிமைகள் பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபட்ட விடயம் ஆகையால் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

இதேவேளை இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கக் கோரி தாம்பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும்

ஐக்கியநாடுகளின் அகதிகளிற்கான தூதுவராலயத்தின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இதற்கான வேண்டுகோள் விடுக்கப்படவுள்ளதாகவும் இவ்வாறான விசேட வேண்டுகோள் விடுக்கப்படுவது இதுவே முதற்தடவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

# சுதந்திரமான தொழிற்சங்கங்கள் இல்லாவிடில் ஜனநாயக சமுதாயம் இருக்க மாட்டாது

## பிடறிக் ஈபேட் மன்ற இலங்கை வதிவிடப் பிரதிநிதி

(தென்மராட்சி)

ஜனநாயக சமுதாயத்தில் தொழிற்சங்கங்கள் அத்தியாவசியமான தூண்களாகும். சுதந்திரமான தொழிற்சங்கங்கள் இல்லாதவிடத்து அங்கு ஜனநாயக சமுதாயம் இருக்க மாட்டாது. ஜனநாயக சமுதாயத்தில் ஆதரவுத்தூண்களாக விளங்குகின்ற தொழிற்சங்கங்கள் தம்முள்ளே ஜன நாயக அமைப்புகளாக விளங்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பிடறிச் ஈபேட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியான டிக்மார்நைட்ஷெல் யாழ், இந்துமகளிர் கல்லூரியில் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான ஜனநாயக தொழிற்சங்கதலைமைத்துவம் எனும் தலைப்பிலான மூன்று நாள் கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைத் தலைவரான திருமதி ச.ஜெயராசா தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமான இவ்வைபவத்தில் யாழ்ப்பாணம் கல்வி வலயப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் 14பிரிவுகளிலும் இருந்து வருகை தந்திருந்த ஆசிரியர்கள் மத்தியில் மன்றத்தின் வதிவிடப் பிரதிநிதி டிக்மார் நைட்ஷெல் தொடர்ந்துஉரையாற்றும் போது,

தொழிற்சங்க ஜனநாயகம் என்பது சங்கத்தில் இருக்கக் கூடிய அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான உரிமைகளையும், கடமைகளையும் பொறுப்புக்களையும் கொண்டிருப்பதாகும். அங்கு தனிப்பட்ட சலுகைகளுக்கோ அல்லது பாரபட்சங்களுக்கோஇடமிருக்க மாட்டாது. தொழிற்சங்கத்தலைவர்கள் நியமிக்கப்படுவதில்லை. பதிலாக சங்க உறுப்பினர்களால் காலத்துக்குக் காலம் தெரிவு செய்யப்படுபவர்கள் அனைத்து முக்கிய தீர்மானங்களும் அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பது முக்கியமான அம்சமாகும்.

தொழிற்சங்கங்கள் அரசினாலோ, அரசியல் கட்சிகளினாலோ, மதஅமைப்புகளினலோ, அல்லதுவேலைகொள்வோர்களாலோஅல்லது செல்வாக்கு மிக்க தனிநபர்களினாலோ வழி நடத்தப்படலாகாது. தொழிற்சங்கங்களில் அதன் உறுப்பினர்களே எஜமானார்கள். தெரிவு செய்யப்பட்ட தலைவர்களல்ல. தொழிற்சங்கங்கள் எந்த வொருகட்சி அரசியல்உறவுகளைக் கொண்டிருத்தல் கூடாது.

அதேவேளை, தொழிற்சங்கமானது கட்சி- அரசியல் போட்டியில் பலிக்கடாவாக இருக்காதுபார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும் தொழிற்சங்கத்துக்குள் பன்முகப்பட்ட அரசியல் பார்வை உள்ளவர்கள் இருப்பார்கள்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கமானது தனியாக தமிழ் ஆசிரியர்களுடைய நலன்களையும் உரிமைகளையும் பேணுகின்ற தொழிற்சங்கமாக இருக்காது இலங்கை பூராகவும் உள்ள அனைத்து ஆசிரியர்களின் நலன்களையும், உரிமைகளையும் பேணுகின்ற அமைப்பாக மிளிர வேண்டியது அவசியமாகும்.

அதேசமயம், இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் இனத்துவ, மொழித்துவ பிரிவினைகளுக்கு அப்பால் கல்வித்துறை ஊடாக ஆசிரியர்கள் மத்தியில் ஜனநாயகப் பண்புகளை மேம்படுத்தி, சமாதானக் கலாசாரத்தையும் இணக்கப்பாட்டையும்வளர்த்து எடுத்து நாட்டில் இனஐக்கியத்தையும் நல்லுறவையும் பேண முயலவேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில்இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த மகாசிவம், மாவட்டச் சிரேஷ்ட செயலாளர் த. பஞ்சலிங்கம், மற்றும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பல்கலைக்கழக ஆய்வாளரான செல்விஹெய்லேட்டும் உரை நிகழ்த்தினர். (உ-77)

# இராசி பலன்

01-10-2002

(புரட்டாதி 15, செவ்வாய்)

தசமி பி இ 3.49 வரை

புனர்பூசம் மு.ப 8.34 வரை

இராகுகாலம் 3 02-4 32

நல்ல நேரம் 10 32-12.02

**மேடம்**

தாய்வழி உறவு. உடல் சோர்வு, முயற்சி தாமதம், கல்விச் சிறப்பு

**இடபம்**

கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி காரியம் கைகூடும்.

**மிதுனம்**

குடும்ப சுகம், முயற்சி தாமதம், அதிகபிரயாசை, விவாதம்.

**கடகம்**

கற்பனை மிகுதி, ஜனவசியம், போசன சுகம், முயற்சி பலிதம்.

**சிங்கம்**

தந்தைவழி உறவு, உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், சயனசுகக்குறைவு.

**கன்னி**

# எழுதுமட்டுவாழ் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்க

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### கலைப்பீடம்

## கல்வியாண்டு 2002 / 2003 விரிவுரைகள்

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக 2ம், 3ம், 4ம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வி யாண்டு 2002/2003ற்கான விரிவுரைகள் 07.10.2002 திகதி ஆரம்பமாகின்றன. மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சிரேஷ்ட மாணவர்களுக்கான (2ம், 3ம், 4ம் வருட) மீள்பதிவுகள் 30.09.2002 திகதி முதல் நடைபெறும். மீள்பதிவு பற்றிய மேலதிக விபரங்களை கலைப்பீட விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம்.

முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்

(C-5046)


தந்தைவழி உறவு, உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், சயனசுகக்குறைவு.

**கன்னி**

நினைத்த காரியம் கைகூடும், தொழில் சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, உறவினர் வருகை.

**துலாம்**

நிலைமாற்றம், கடின முயற்சி, மேன்மை, சுப நிகழ்வு.

**விருச்சிகம்**

பிரயாணம், மனப்பதற்றம், தொழில் சிந்தை, உடல் நலக்குறைவு.

**தனுசு**

எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், உறவினர் வெறுப்பு, காரிய தாமதம்.

**மகரம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, நண்பர்கள் சந்திப்பு களஸ்திர சுகம், தனவரவு.

**கும்பம்**

சுவாரஸ்யம், சத்துரு ஜெயம், உடல் நலம், காரிய அனுகூலம்.

**மீனம்**

தாழ்ந்த சுபாவம், வியாபாரநன்மை, காரிய இடையூறு, திடீர் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# எழுதுமட்டுவாழ் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்க பிரதமர் ரணிலுக்கு மகஜர்

(திருநெல்வேலி)

எழுதுமட்டுவாழ், கரம்பகம் பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி அப்பகுதிமக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் எதிர்வரும் 15ந்திகதிக்கு முன்னர் அப்பகுதியில்மீளக்குடியமரஅனுமதிக்கப்படாத பட்சத்தில் தென்மராட்சிப் பிரதேசசெயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை கடந்த இரண்டுவருடங்களாக உயர் பாதுகாப்பு வலயம்எனக் காரணம் காட்டி தென்மராட்சியில் பொதுமக்கள் தமது சொந்த வீடுகளை பார்வையிடுவதற்கு அனுமதி மறுத்துவந்த படைத்தரப்பினர் சிலதினங்களுக்கு முன்னர் வீடுகளைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கியிருந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது.

(த-43)

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(சுண்டுக்குளி)

யாழ் சென். அன்ரனிஸ் மைதானத்தில் இருந்து சிறு தொகைப்பணம் அடங்கிய பேர்ஸ் ஒன்று நேற்றைய தினம் கண்டெடுக்கப்பட்டு யாழ் உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் பிரான்சிஸ்ஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவரை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-110)

## நாடகக் கலைஞர் விபரத்திரட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலைக்கழக நாடகக்குழுவினால் தமிழ் நாடகக்கலைஞர்களின் விபரத்திரட்டு ஒன்று வெளியிடப்படவுள்ளதால் நாடகக்கலைஞர்கள் மேற்படி நாடகக்குழு உறுப்பினர் செல்லையா மெற்றாஸ்மயிலிடம் விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று இம் மாதம் 8 ந் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# நாட்டில் நான் உட்பட ஒருசில புத்திஜீவி அரசியல்வாதிகளே தற்போது உள்ளனர்

## ஜனாதிபதி சந்திரிகா அனுராதபுரத்தில் அகங்கார உரை

(கொழும்பு)

நாட்டின் கல்விமுறையில் இன, மதம், சாதி வேறுபாடுகள் ஆதிக்கம் செலுத்தியதன் காரணமாகவே வடபகுதியில் யுத்தம் ஏற்பட்டது என ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் மிலேனியம் ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; இவ்வேறுபாடுகள் வசதிபடைத்தவர்களுக்கும், வசதிஅற்றவர்களுக்கும் இடையே பாரிய இடைவெளியை ஏற்படுத்தியதனாலேயே யுத்தம் ஆரம்பித்தது என்று குறிப்பிட்டார்.

மேலும் இந்த நாட்டில் கல்வியறிவு பெற்ற கௌரவம் மிக்கஅரசியல்வாதிகள்இல்லையென கவலை தெரிவித்த ஜனாதிபதி தான் உட்பட ஒருசில புத்திஜீவி அரசியல்வாதிகளே நாட்டில் தற்போது உள்ளனர் எனவும் சுட்டிக் காட்டினார்.

அரசியல் மூலம் தமக்கு பணம் சம்பாதிப்பதே பெரும்பாலான அரசியல்வாதிகளின் தற்போதைய நோக்கமாகும்.

எனவே, கல்விக்கொள்கையில் மீண்டும் திருத்தம் ஒன்றைஏற்படுத்துவதன்மூலம் நாட்டில் சீர்கெட்டுப் போயுள்ள சமுதாயங்களை மீண்டும் ஒன்றுபடச் செய்ய முடியும் எனவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தயாரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இவ்வார இறுதியில் பூரணமாக தயாரிக்கப்பட்டு விடும் என்று வர்த்தகர் நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்தார்.

இதன் பொருட்டு பாகிஸ்தான் அமைச்சர் அப்துல் ரசாத் தாவூர் இவ்வாரம் இலங்கை வரவுள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (உ-10)

## கந்தளாய் பகுதியில் இரத்தினக்கல் அகழத்தடை

(திருகோணமலை)

கடந்த நான்கு வருடங்களாக கந்தளாய் குளப்பகுதியில் இடம்பெற்று வந்த இரத்தினக்கல் அகழ்வு முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

களவாக இரத்தினக்கல் தோண்டுபவர்கள் கந்தளாய் குளத்தின் அணைப்பகுதியை தோண்டுவதனால் அப்பகுதியின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதுடன், தோண்டப்படும் மண் குளத்தை மூடுவதுடன், நீரையும் அசுத்தப்படுத்துகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தலையீட்டை அடுத்து இச்செயற்பாடு முற்றாக கைவிடப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## சமாதானத்தை ஏற்படுத்த முயல்வது கம்பி மேல் நடப்பதை ஒத்தது

### அமைச்சர் திஸநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு நாட்டில் நிலவும் நீண்டகாலப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு சமாதானத்தை ஏற்படுத்த முயல்வது என்பது கம்பியின் மேல் நடக்கும் அபாயத்தை ஒத்தது.

இவ்வாறு சமுர்த்தி மற்றும் கைத் தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்,

நேற்றுமுன்தினம் பதுளையில் நடைபெற்ற புலமைப் பரிசில் வழங்கும் வைபவமொன்றில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர்அங்குதொடர்ந்தும் உரையாற்றுகையில்; பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா இதய சுத்தியுடனும், பல அனுபவங்களைக் கொண்டும் மிகவும் ஆறுதலாக சமாதான நகர்வுகளை முன்னெடுத்துச் செல்கிறார்.

நாட்டில் சகல வல்லமைகளும் படைத்த முதலாவது தலைவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஆவார். எனினும், அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியிலேயே முடிந்தன என்று குறிப்பிட்டார்.

ஆனாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு, விடுதலைப்புலிகளுடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டு வருகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

(உ-8)

## வவுனியா-மட்டுரயில்சேவை இன்று முதல் ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா-மட்டக்களப்பு பிரதேசங்களுக்கிடையிலான இணைப்பு ரயில்சேவை கடந்த 13வருடங்களின் பின்னர் மீண்டும்ஆரம்பமாகவுள்ளது.

இன்று முதல் இவ்ரயில் சேவை நடைபெறவுளளதாக வாழைச்சேனை ரயில் நிலைய பிரதம அதிபர் எஸ். துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

முன்னைய காலங்களில் இரவு-பகல் சேவையாக நடைபெற்ற இவ் ரயில்சேவை நாட்டின் போர்ச் சூழல்கள் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

(க-08)

## போக்குவரத்துக்கு பொருத்தமற்ற வாகனங்கள் பாவனையில் உள்ளனவாம்

(கொழும்பு)

அரசாங்க சேவைகளுக்கென தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களில் 75 சதவீதமானவை போக்குவரத்துக்கு பொருத்தமானவை அல்ல என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஈ.ஜனதாஸ தெரிவித்துள்ளார்.

குருநாகலில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற பஸ்சாரதிகள் நடத்துநர்கள் பங்குபற்றிய கருத்தரங்கொன்றில் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; இயந்திரத்தில் பழுதுகள் உள்ள வாகனங்களை போக்குவரத்துக்கு பயன்படுத்துவதனால், அதில் இருந்து வெளியேறும் புகை மக்களின் தேக ஆரோக்கியத்துக்கு அபாயத்தை ஏற்படுத்துவது மாத்திரமன்றி, சுற்றாடலுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

தனியார் பஸ் சாரதிகளே போக்குவரத்து விதிகளை மீறுகின்றனர். இதனால், விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

அடுத்த வருடத்தில் இருந்து சாரதிகளை மதிப்பிடும் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் பற்றி கலந்துரையாடல்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக யு.என்.எச்.சி.ஆர். நிறுவனப் பிரதிநிதிகள் நேரடியான கலந்துரையாடலகளை நடத்தி வருகின்றனர்.

ஏ-9 தரைவழிப்பாதையூடாக வந்து மீளக்குடியமர்ந்த நாரந்தனை தெற்கு, வடக்கு மற்றும் மத்திப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுடனேயே இவ்வாறான கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. (க-75)

## கசிப்பு வேட்டை

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்மேரிஸ் இளைஞர் ஒன்றியத்தினர், மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் என். சோதிநாதன் தலைமையில் நடத்திய கசிப்பு வேட்டையில் நாவாந்துறையைச்சேர்ந்த ஒருவரதுவீட்டில் கசிப்பு உட்பட உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பலவும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, மேற்படி இளைஞர்ஒன்றியம் கசிப்பு ஒழிப்பில் முன்மாதிரியாகச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## பொது நிலங்களில் மூலிகைச் செடி வளர்ப்பு

(கொழும்பு)

நாட்டில் அருகிவரும் மூலிகைகளை நாடுபூராகவும் அமைந்துள்ள ஆலயங்கள், விகாரைகள் மற்றும் பாடசாலை நிலங்களிலும் வளர்ப்பதற்குபுத்தசாசனநிலஅமைச்சர் லி. மு. லொக்குபண்டார ஆலோசித்துள்ளார்.

இம்மாதம் 20 ஆம் திகதி முதல் ஒருமாதகாலத்திற்குள் நாடுபூராகவும் இத்திட்டம் செயறபடுத்தப்படும் என்றும், மூலிகைச் செடிவளர்ப்புதிட்டம் முதலில்கண்டியைகேந்திரமாகக்கொண்டு ஆரம்பிக்கப்படும்என்றும் அமைச்சர் லொக்கு பண்டார மேலும் தெரிவித்துள்ளார். (உ-7)

## கத்தோலிக்க சாகித்திய போட்டிகள் டிசம்பரில்

(ஈச்சமோட்டை)

தேசியரீதியில் கத்தோலிக்க சாகித்தியப் போட்டிகளை எதிர்வரும் டிசம்பர் மாதம் நடத்துவதற்கு தேசிய கத்தோலிக்கசாகித்தியப்பேரவை முடிவு செய்துள்ளது.

மாணவர் மட்டம் மற்றும் திறந்த மட்டத்தில் தமிழ் சிங்கள கத்தோலிக்கர்களிடையே இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறுகதை, கட்டுரை, கவிதைப் போட்டிகள் இதில் இடம் பெறும்.

இதேவேளை 1-09-2001 ஆம் ஆண்டு முதல் 31-08-2002ஆம் ஆண்டு வரை கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலனில் பிரசுரமரனகவிதைகளும்போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன. (உ-59)

## 300 பேருக்கு சிகிச்சை

(ஏழாலை)

மானிப்பாய் லயன்ஸ்கழகத்தின் ஆதரவுடன் நேற்று முன்தினம் ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் 300 பேர் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுள்ளதுடன், 75 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

(உ-206)

## அந்நிய மத ஆக்கிரமிப்புக்கு எதிராக கல்விப்பணியை முன்னெடுத்தவர் அமரர் அத்தியார்

### ஸ்தாபகர் நினைவு விழாவில் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உட்பட சகல பகுதிகளிலும் அந்நிய மதஆக்கிரமிப்பு இடம்பெற்ற கால கட்டத்தில் சைவ மதத்தைப் பேண வேண்டும் என்ற பெரு நோக்கில் நீர்வேலியில் ஒரு பாடசாலையை உருவாக்கி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர் அமரர் அத்தியார் அருணாசலம் ஆவார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கலலூரியில் அண்மையில் இடம் பெற்ற ஸ்தாபகர் நினைவு விழா, மற்றும் பரிசளிப்பு நிகழ்வில் ஆய்வுரை நிகழ்த்திய நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ கு. தியாகராஜாக் குருக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் உப-அதிபர் அ. அமிர்தலிங்கத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆய்வுரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்; வசதிகள், வாய்ப்புகள் எதுவுமற்ற ஒரு காலப்பகுதியில் நீர்வேலி சிவசங்கரன் பண்டிதரால் திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பிககப்பட்டு அவரது மகன் சிவப்பிரகாச பண்டிதரால் வளர்த்தெடுக்கப்பட்ட இப் பாடசாலையை துணிந்து பொறுப்பேற்றுநிறைந்த அர்ப்பணிப்புடன் பாடசாலைக் கட்டட வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய இவரது சேவை காலத்தால் அழியாத ஒன்றாகும்.

வலிகாமம் கிழக்கில் மிகச் சிறந்த இந்துப் பாடசாலையாக திகழும் இப் பாடசாலைக்கு அரும்பணியாற்றியவர் என்ற பெருமை இவரையே சாரும் என்றார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ், முன்னாள் அதிபர் சு. விசுவலிங்கம், ஆசிரியர் ஐ.சிவராஜா உட்பட பிரமுகர்கள் பலர் உரை நிகழ்த்தினர்.

ஸ்தாபகர் அத்தியார் அருணாசலத்தின் நினைவாக 1967 ம் ஆண்டு வெளியிடப்பட்ட நினைவு நூல் மீள் பதிப்புச் செய்யப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்டமை சிறப்பம்சமாக விளங்கியது.

(க)

# ஜசீர் அராபாத்தின் அலுவலக முற்றுகையை இஸ்ரேல் இராணுவம்விலக்கிக் கொண்டது

(ஜெருசலேம்)

கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் மேற்குக் கரையின் ரமழாநகரில் உள்ள பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமையகம் இஸ்ரேலிய இராணுவத்தினரின் கடும் முற்றுகைக்கு உள்ளாகியது.

அரபாத்தின் மாளிகையைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்ட இஸ்ரேல் இராணுவத்தின் டாங்கிகள் அவரது மாளிகையைச் சுற்றியுள்ள கட்டடங்கள் அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக தகர்த்தெறிந்தது.

மேலும், இந்நிலைமை நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்ததால் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அவர் மீதான முற்றுகை கைவிட்டப்பட்டது.

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்திற்கு எதிரான முற்றுகை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனையடுத்து கடந்த 10நாட்களாக முற்றுகையிடப்பட்டுள்ள அரபாத் நேற்றுத் தனது வளாகத்தை விட்டு வெளியே வந்தார்.

அந்த வளாகத்தின் முன்பு கூடியிருந்த பெருமளவு எண்ணிக்கையான மக்கள் அவரை வாழ்த்திக் கோஷமெழுப்பினர்.

முன்னதாக, ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய தீர்மானத்தை அரபாத் வாசித்து காண்பித்ததோடு இஸ்ரேலிய அரசு ஐ.நா சபையின் தீர்மானத்தை புறக்கணித்தது பற்றிச் சுட்டிக் காட்டினார்.

இதனிடையே இவ் வளாகத்திலிருந்து இஸ்ரேலியப்படையினர் வெளியேறிய போதிலும் அவர்கள் அதன் அருகே நிலை கொண்டுள்ளனர்.

அத்துடன் வளாகத்தின் அலுவலகத்தில் தங்கியிருப்போரை வெளியேற்றலாம் என்று தெரிவித்து இஸ்ரேலியப் படையினர் அங்கு தங்களால் தேடப்படுவோர் அவ்விடத்தை விட்டு வெளியே வந்தால் அவர்களைக் கைதுசெய்வோம் எத் தெரிவித்தனர்.

எனினும் இஸ்ரேலியப் படையினரால் தேடப்பட்டோர் ஏற்கனவே வளாகத்தை விட்டு வெளியேறி விட்டார்கள் என பலஸ்தீனப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் அழுத்தத்தின் காரணமாக இஸ்ரேலியப் படையினர் அரபாத்தின் மீதான முற்றுகையை முடிவக்குக் கொண்டு வந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (சு)

## ஐ.நா சபையில் வேண்டுகோள்

(தைப்பி)

ஐக்கிய நாடுகள் சபையில் தாய்வானுக்கு உறுப்புரிமை அளிக்கப்பட வேண்டுமென தாய்வானின் முதல் பெண்மணியான வூஷுசென் தெரிவித்துள்ளார்.

1993தொடக்கம் ஐ.நாவில் தாய்வான் அங்கத்துவம் கோரி வருகின்றது. ஆயினும் இதற்குச் சீனா எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது எனினும்,

சர்வதேச அமைப்புகளிலிருந்து தாய்வானை ஓரங்கட்ட நியாயமான காரணம் எதுவும் இல்லையென சென்ஷுபியின் மனைவி வூஷுசென் கூறுவதோடு சீனாவின் சர்வாதிகாரத்திற்குத் தாய்வான் அடிபணியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சு-04)

## ஈராக்கின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்


### பிரித்தானியப் பிரதமர் தெரிவிப்பு

(பக்தாத்)

ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹீசைன் வைத்திருக்கும் ஆயுதம் எந்த வகையிலேனும் களைக்கப்பட வேண்டுமென பிரித்தானியப் பிரதமர் ரொனிபிளேயர் தெரிவித்துள்ளார்.

சதாம்ஹுசைன்சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கிறார். என்றும் அவருடைய ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லையெனவும்தெரிவித்த ரொனி பிளேயர் இதனை எவ்வாறு நிறைவேற்ற வேண்டுமென கேள்விக் குறியாக இருப்பதாகவும் தெரிவித்தார். பிரிட்டிஸ் தொழிற் கட்சியின் வருடாந்த மாநாட்டிற்கு முன்னர் கருத்துத் தெரிவித்த அவர்,

ஈராக்கிற்கு எதிரான கடுமையான தீர்மானங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை ஒப்புதல் தரும் என்று தான் நம்பிக்கை கொண்டுள்ளதகாவும் மேலும் தெரிவித்துள்ளார். (சு-4)



ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடாது என்று கோரி லண்டனில் உள்ள ஹைட் பார்க் என்ற இடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## உலக தரிசனம்

## ஐவர் சுட்டுக் கொலை

(புதுடில்லி)

கோயம்புத்தூரில் கடந்த 98ஆம் ஆண்டு இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான இமாம் அலி மற்றும் அவனது குற்றவாளிகள் 4பேரை பெங்களூர் அருகே தமிழகக் காவல் துறையின் சிறப்புக் குழுவினர் நேற்று சுட்டுக் கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## *சிம்பாவே எதிர்க் கட்சி குற்றச்சாட்டு*

(சிட்னி)

சிம்பாவேயில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்துவரும் வேளையில் ஜனாதிபதி றொபெட் முகாபையின் ஆதரவாளர்கள் வன்முறைகளையும் மிரட்டல்களையும் அதிகரித்துள்ளதாக பிரதான எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

வன்முறை தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் இதுவரை கிடைக்கவில்லையென பொலிஸாரும், தேர்தல் அதிகாரிகளும் கூறியுள்ளனர் (சு-4)

## நடிகர் சல்மான்கானின் ஜீப் விபத்துக்குள்ளானது

### வீதியில் தூங்கியவர் பலி

(புதுடில்லி)

பிரபல இந்தி நடிகர் சல்மான் கான் நேற்று முன்தினம் காலை தனது ஜீப்பில் சென்ற போது தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது ஜீப்பைச் செலுத்தியதில் ஒருவர் பலியானார். இதையடுத்து மும்பை பந்த்ரா காவல் நிலையத்தில் சல்மான்கான் சரணடைந்தார்.

பந்த்ரா ஹில் சாலை சந்திப்பு அருகேயுள்ள பேக்கரிக்கு வெளியே அதில் பணியாற்றும் சிலர் தூங்கிக் கொண்டிருந்த வேளை அவ்வழியாக வந்த நடிகர் சல்மான் கான் தனது ஜீப்பை மிகவேகமாக ஓட்டி வரும் போதே இவ் அனர்த்தம் நிகழ்ந்தது.

சம்பவத்தில் ஒருவர் பலியானதுடன் 3பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் ஜீப் விபத்தில் சிக்கியதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் கூடி சல்மான் கானைத் தாக்க முற்பட்டனர் என்றும் சல்மான்கான் அப்பகுதியிலிருந்து தப்பியோடி தனது வழக்கறிஞருடன் பந்த்ரா காவல் நிலையத்தில் சரணடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## ரயில் நிலையத்தில் ஏற்பட்ட நெரிசலில் 17 பேர் பலி

(புதுடில்லி)

உத்தரப்பிரதேசம் மாநிலம் லக்னோவில் நேற்று நடைபெற்ற பகுஜன் சமாஜ் கட்சியின் பேரணி ஒன்றில் கலந்துகொள்ள வந்திருந்த தொண்டர்கள் 17 பேர் ரயில் நிலையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

லக்னோவில் நடைபெற்ற இந்தப் பேரணியில்துணைப் பிரதமர் எல். கே. அத்வானி கட்சித் தலைவர் கன்சிராம் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். இந்தப் பேரணியில் பங்கேற்பதற்காக ஆக்ரா உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு இடங்களிலிருந்து லக்னோவில் லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர் என்றும் பின்னர், தொண்டர்கள் அனைவரும் லக்னோவில் உள்ள ரயில் நிலையத்தில் ஊருக்கு திரும்புவதற்காக கூட்டம் கூட்டமாகச் சென்று ரயில் நிலையத்திலிருந்த படிக்கட்டில் ஏராளமானோர் ஒரே நேரத்தில் ஏறினர். இதில்அதிகளவு நெரிசல் ஏற்பட்டது என்றும்,

இதனிடையே கூட்டத்தில் வந்த ஒருவர் தவறி விழுந்ததால் பதற்றம் ஏற்பட்டு ஒருவர் மீது ஒருவர்முண்டியடித்து படிக்கட்டில் ஏறினர். இந்த நெரிசலில் சிக்கி 17க்கும் மேற்பட்டோர் உடல் நசுங்கிப் பலியானார்கள். பலர் காயமடைந்து மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## அமெரிக்காவின் தீர்மானத்தை ஐ.நா . சபை ஏற்றுக் கொள்ளும் !

### பிரிட்டிஷ் பிரதமர் நம்பிக்கை

(பிரிட்டிஷ்)

அமெரிக்கா முன் வைக்கும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை ஏற்றுக்கொள்ளும் என்று தாம் நம்புவதாக ரொனி பிளேயர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்க ஜெற் விமானங்கள் ஈராக்கின் பன்னிகர் விமானத் தளத்தையும் ரேடர் கருவிகளையும் தாக்கியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது. இந்த நிலையில் ஈராக் தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கொண்டுவர இருக்கும் தீர்மானத்திற்கு அமைவாக சர்வதேச நாடுகளின் ஆதரவை திரட்டும் நோக்கில் தமது சிறப்புத் தூதுவரை பிரித்தானியா சீனாவுக்கு அனுப்பியுள்ளது. (சு)

## ம.தி.மு.க செயலர் வை.கோ. விசாரணைக்காக பூந்தமல்லி நீதிமன்றில்

(புதுடில்லி)

போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகச் செயலர் வைகோ. இன்று போடோ சிறப்பு நிதி மன்றத்தில் முன்நிறுத்தப்படுகிறார்.

இது வரையில் அவருக்கு இரு தடவை தடுப்புக் காவல் நீடிக்கப்பட்டிருந்த நிலையில் சென்னை பூந்தமல்லியில் இருக்கும் போடோ சிறப்பு நீதி மன்றத்தில் நிறுத்தப்படவிருக்கிறார்.

இன்றும் அவருக்கு தடுப்புக் காவல் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வழக்குத் தொடர்பாக வை.கோ தானே வாதாடுவது குறிப்பிடத்தக்கது. (சு)

## ஐவரிக் கோஸ்ரில் தொடரும் சண்டையை அடுத்து அயல் நாடுகளிடம் இராணுவ உதவி கோருகிறார்

### ஜனாதிபதி லோரன்ட் கபோக்கா

(புரோபோ)

ஐவரிக் கோஸ்ரில் ஜனாதிபதி லோரன்ட் கபோக்காவிற்கு எதிரான படையினர் நாட்டின் நிர்வாகத் தலைநகரான யாமுசுக்ரோவைக் கைப்பற்றும் நோக்கில் முன்னேறியதையடுத்து அந்நாட்டு ஜனாபதி அயல் நாடுகளிடமிருந்து அவசர இராணுவ உதவியைக் கோரியிருக்கிறார்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் அரசின் நடவடிக்கைகளில் வெறுப்புற்ற படையினர் சிலர் சதி முயற்சி ஒன்றை மேற்கொண்டனர்.

இதனையடுத்து, அவர்கள் நாட்டின் முக்கிய நகரான திபிசுவைக் கைப்பற்றித் தொடர்ந்தும் முன்னேறினர். இதனால் பிரான்ஸ் மற்றும் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளிடமிருந்து இராணுவ உதவி கோரப்பட்டது.

இதே வேளை ஐவரிக் கோஸ்ரின் இந்தக் கோரிக்கையை பிரான்ஸ் ஏற்க மறுத்து விட்டது. இச்சதி முயற்சியின் பின்னணியில் வெளிநாடு ஒன்று இருக்கிறது எனத் தெளிவாகப் புலப்படாதவரை இராணுவ உதவி வழங்கப்போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தமது படையினர் தொடர்ந்தும் போராடி வருவதாகவும், ஆனால் தமக்கு ஆயுத, மற்றும் மருத்துவ உதவிகள் அவசியம் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐவரிக் கோஸ்ட் தம்மிடம் வேண்டுகோள் விடுத்தால் தமது படையினரில் 4ஆயிரம் பேரை அங்கே அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளதாக செனகல் நாட்டின் ஜனாதிபதி அப்துல்லாயே தெரிவித்துள்ளார்.

எனவே இந்த அவசர நிலை குறித்து மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கானா நாட்டின் தலைநகரில் சந்தித்து உரையாடியுள்ளனர். (சு)

## ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பினராக பாகிஸ்தான் தெரிவு

(பிரிட்டிஷ்)

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை உறுப்பு நாடாக பாகிஸ்தான் அங்கம் பெறவுள்ளது அடுத்த மூன்று மாதங்களில் பாகிஸ்தான் இப்பொறுப்பை ஏற்கவுள்ளது.

ஐ.நா பாதுகாப்புச்சபையில் பிரித்தானியா, அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய 5நாடுகள் நிரந்தர உறுப்பு நாடுகளாகவுள்ளன.

தற்காலிக உறுப்பு நாடுகளாக 10 நாடுகள் உள்ளன. இந்தத் தற்காலிக உறுப்பு நாடுகளின் பதவிக்காலம் 2ஆண்டுகளாகும்..

ஒவ்வொருநாடும் சுழற்சிமுறையில் இந்த பதவியினை வகிக்கும் அந்தவகையில் 2003 ஆம் அண்டு ஜனவரி மாதம் ஐ. நாவின் பாதுகாப்புச்சபை உறுப்பு நாடாக பாகிஸ்தான் இடம்பெறவுள்ளது. தெற்காசியாவிலிருந்து தற்காலிக உறுப்பு நாடுகளில் இடம் பெறுகின்ற ஒரே ஒரு நாடு பாகிஸ்தான் ஆகும்.

தற்காலிக உறுப்பு நாடுகளாக இருக்கின்றகொலம்பியா, அயர்லாந்து மொறிசீயல் நோர்வே சிங்கப்பூர் ஆகிய வற்றின் பதவிக்காலம் இந்த ஆண்டோடு நிறைவடைவதால் பாகிஸ் தான் உட்பட 5 நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம்பெற இருக்கின்றன. 1993, 1994 ஆம் ஆண்டிலும் ஐ.நா பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பு நாடாக பாகிஸ்தான் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (சு-)



செனகலில் நூற்றுக்கணக்கான பயணிகளை ஏற்றிச்சென்று விபத்துக்குள்ளான ஜவூலா கப்பல், விபத்து நடைபெறுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்.

# இன்று ஒரு தகவல்

## மோட்சம் எங்கே உண்டு?

ஒருவர் வெகு நேரமாக ஆகாயத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். ''அங்கே எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்று கேட்டேன் எனக்கு மோட்சம் கிடைக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. அது தான் அது எங்கேயிருக்கிறது என்று பார்த்து கொண்டிருக்கிறேன்!' என்றார் 'அது அங்கேயில்லை சார்!' என்றேன் அப்படி யென்றால் அது இருக்கிற இடம் உங்களுக்குத் தெரியுமா?' என்றார்.

''அது எனக்குத் தெரிந்தால் இப்படி ஏன் உங்களுக்குத் தகவல் சொல்லிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்'' என்றேன், அடப் போங்கள் சார்!' என்று சொல்லிவிட்டு அவர் மறுபடியும் ஆகாயத்தையே பார்க்க ஆரம்பித்து விட்டார். பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? (சாயிபாபா) மோட்சமென்பது ஆகாயத்திலிருந்துவிழுவதும்இல்லை பூமியிலிருந்து எழும்பி வருவதும் இல்லை அது இந்த உலகத்தில் இருப்பதும் இல்லை. மோட்சமென்பதுஒருநிலை... அந்த நிலையை நம்மால் அடைய முடியுமா? முடியும்!

இதயத்தில் இருக்கிற ஆசைகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்து எறிந்து விட்டால். அதன் பின் உண்டாகிறநிலை இருக்கிறது பாருங்கள்... அது தான் மோட்சநிலை. இதற்கு ஒரு உதாரணம் இப்போது சுலபமாக உயரப் போகக் கூடியது எது? காற்றில் ஒரு காகிதம் உயரப் பறக்கும். பஞ்சும் பறக்கும் இதற்கு என்ன காரண? அவை இரண்டிலும் கனம் இல்லை. அவை இரண்டும் இலகுவாக உள்ளன. அதனால் பறக்கின்றன.

மனிசனும் அப்படிப் பறக்க வேண்டும அதற்கு என்ன செய்ய வேண்டும? இறக்கை கட்டிக் கொள்ளலாமா? அல்லது வேறு எதிலாவது ஏறிக் கொண்டு பறக்கலாமா? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். அவனிடம் உள்ளடங்கியிருக்கிற ஆசைகள். சுயநல நாட்டத்தோடுபொருள்களை சேர்க்கிற தன்மை இவைகள் தான் மனிதன் மீது ஒரு சுமையாக உட்கார்ந்து அழுத்திக் கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் ஆசைகள் அதிகமா

இருக்கிறதென்று நினைக்கக் கூடாது. அதே மாதிரி ஒரு குருவோ, சாமியாரோ ''இந்தாங்க மோட்சம்'' என்று எடுத்துக் கொடுத்திடவும் முடியாது.

ஒருவருக்குள்ளே இருக்கிற உண்மையை மெய்ப்பொருளை உணர்த்துவது தான் மோட்சம் என்பது அதை விட்டுவிட்டு வெளியில் இந்தப் பேரைச்சொல்லிவியாபாரம் பண்ணிக் கொண்டு இருக்கிறவர்களையெல்லாம் நம்பாதீர்கள் வெளிஉலகத்தில் பிரயாணம் செய்வது மாதிரி உங்களுக்குள்ளேயே பிரயாணம் பண்ணுங்கள் சார். அதுதான்மோட்சத்துக்கு போகின்ற வழி.

உங்களுக்கு நன்றாகத் தெரியும் ஒரு விமானத்தில் இவ்வளவுதான் பாரம் ஏற்ற வேண்டும் என்று கணக்கு இருக்கிறது. அதற்கு மேல் ஏற்றமாட்டார்கள். ஒருஇயந்திரத்துக்கு இவ்வளவு கட்டுப்பாடு இருக்கிறபோது ஆன்மீகத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு இது எந்த அளவுக்கு அவசியம் என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். மிருகங்களுக்கு வெளிப் பார்வை தான் உண்டு. உள் பார்வை கிடையாது.

பச்சைப்புல்எங்கே யாவது கண்ணில் பட்டால் பசுமாடு நேராக அங்கே போய் விடும். அது யாருடைய நிலம் . . . அங்கே போவது சரியா? தவறா என்றெல்லாம்யோசிக்காது

மனிதன் அப்படி இல்லை. மனதைஉடையவன் மனிதன். இவன் உள்பார்வை பார்க்க வேண்டும். அங்கே உட்கார்ந்திருக்கிற சுமைகளையெல்லாம் தூக்கியெறியவேண்டும். அப்போதுதான் ஆகாயத்தில் பறக்கமுடியும். மோட்சத்தை அடையமுடியும். அதை விட்டு விட்டு சுலோகம் சொல்வது, தியானம் பண்ணுவது, பாராயணம் பண்ணுவது, ஜெபமாலைஉருட்டுவதுஇவையெல்லாம் பிரயோசனப்படாது.

ஒருவர் சொன்னார். ''சார் நான் ஆகாயத்திலே பறக்க வேண்டும் என்பதற்காக அண்ணாந்து பார்த்துக்கொண்டே நின்றேன் கண்ணை மூடித் தியானம் பண்ணினேன். உடனே என்னுடைய சுமை குறைந்தது. இருந்தாலும் ஆகாயத்திலே பறக்கமுடியவில்லை இப்போது நான்

### ஆயிரக்கணக்கானோருக்கு

# ஜேர்மனியில் வதிவிட அந்தஸ்து

# 10 ஆயிரம் இலங்கையருக்கு நன்மை

### ஜனாதிபதி ஜெர்கார்ட் மீண்டும் பதவியை தக்க வைத்தார்

(கொழும்பு)

ஜேர்மனியில் அண்மையில் நடைபெற்ற தேர்தலின்மூலம் மீண்டும் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஜெர்கார்ட் ஸ்ரோடரின் தலைமையிலான மத்திய இடது சாரிகூட்டணிபல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு நிரந்தர வதிவிட விசா வழங்கவுள்ளது.

அங்கு வசிக்கும் இலங்கைத் தமிழர் அகதிகள் 10 ஆயிரம் பேர் இதனால் நன்மையடையவுள்ளனர்.

ஜனாதிபதி ஜெர்கார்ட் கடந்த அரசாங்கத்தில் கொண்டுவந்த மேற்படி அகதிகள் தொடர்பான சட்டம் அடுத்தவருடம் 2003 ஜனவரியில் அமுல் படுத்தப்படவிருந்தது.

எனினும் பொதுத் தேர்தலில்எதிர்க்கட்சி வெற்றி பெற்றிருந்தால், இந்தச்சட்டத்தை ரத்துச்செய்யக்கூடியநிலைமை இருந்த போதிலும் மீண்டும் ஜெர்கார்ட் ஆட்சியைக் கைப்பற்றிய தனால் அகதிகள் தொடர்பான இச் சட்டம் அமுல் படுத்தும் ஏதுநிலை உருவாகியுள்ளது. (க-7)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும்-லீக் சுற்றுப் போட்டியில் நாளை பி.ப. 4-00 மணிக்கு கிறிஸ்கிங்ஸ் வி.க எதிர் வளர்மதி வி.க, பி ப 5.15 மணிக்கு சென்மைக்கல் வி.க, எதிர் பொற்பதி 'பி' வி.க, ஆகியன பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

## சிறுவர் தின நிகழ்வு இன்று

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இன்று சிறுவர் தினவிழா இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் புளியங்கூடல் -இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் மு.ப.10 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்ட அலுவலர் ஜெ தற்பரன் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-75)

## முதியோர் தின விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் முதியோர் விழா எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப் படவுள்ளது.

மேற்படி முதியோர் விழா காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ.எக்ஸ். செல்வநாயகம்தலைமையில் மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

## நீலங்காட்டு மக்கள் குடியமர முடியாதநிலை

(காரைநகர்)

காரைநகர் நீலங்காட்டுப் பகுதிமக்கள் மீளக்குடியமர முயற்சிசெய்தும் அடிப்படை வசதிகள் வழங்குவதற்கு பொதுஅமைப்புகள் எதுவும் முன்வரவில்லைஎன கவலை தெரிவிக்கப்படுகிறது.

நீலங்காட்டு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஊடாக 67 குடும்பங்கள் மீளக்குடியமர விண்ணப்பித்தும் 20 தற்காலிக வீடுகளே அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏனைய குடும்பங்கள் மீளக்குடியமர முடியாதநிலையில் உள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

ஏனைய குடும்பங்களையும் மீளக்குடியமர்த்த ஏற்றவசதிகள் செய்யுமாறு ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபரை இப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளது. (உ-246)

## புலிகளின் குரல் கலை இலக்கிய போட்டி விதிமுறைகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் 12 வது ஆண்டு நிறைவை ஒட்டி வானோசை- 12 கலை இலக்கியப் போட்டிகள் வடக்கு-கிழக்கின் சகல பகுதிகளிலும் விரைவில்நடைபெறஉள்ளன.

வானொலி நாடகம், சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், ஒளிப்படம் ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஆக்கங்கள் யாவும் தமிழீழ விடுதலையை முன்னெடுப்பதாகவோ, சமூகமேம்பாடு கருதியதாகவோ, அமைய வேண்டும் என்றும், ஆக்கங்கள் எழுதுதாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும், கையெழுத்துப் பிரதியாகவோ, தட்டச்சுப், பிரதியாகவோ அனுப்பி வைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான ஆக்கங்

...குறையாமலும், 04 பக்கங்களுக்குமேற்படாமலும் பிரதி அமையவேண்டும் கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக்கவிதைகளாகவோ அமையலாம்.

கட்டுரை 10 பக்கங்களுக்கு அண்ணளவாக பிரதி அமைய வேண்டும்.

ஓவியம் 12X10 அங்குலஅளவில் அமையவேண்டும். ஓவியம் வரைவதற்கு எத்தகைய வர்ண ஊடகங்களையும் பயன்படுத்தலாம்.

ஒளிப்படம் 06X04 அங்குல அளவில் அமையவேண்டும். ஒளிப்படங்கள் கறுப்பு, வெள்ளைப்படங்களாகவோ, வண்ணப்படங்களாகவோ அமையலாம்.

31-10-2002 இற்கு முன் புலிகளின் குரல் நிறுவனம் நடுவகப்பணியகம், யாழ்;

தான் மனிதன் மீது ஒரு சுமையாக உட்கார்ந்து அழுத்திக் கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் ஆசைகள் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. சுயநலநாட்டமோ ஆகாயத்தையே எட்டிப் பிடிக்கிற அளவுக்கு பெருகிக் கொண்டிருக்கிறது இப்படி மனதின் பளு,புலன்களின்பளு இவை இரண்டும் மனிதனை அமுக்கி வைத்திருக்கிறபொழுது அவன் எங்கே ஆகாயத்தில் பறப்பது?

எழுந்திருப்பதே கஷ்டம்! அவன் எங்கே மோட்ச நிலையை எட்டிப் பிடிப்பது. மோட்சம் என்றால் அது ஏதோ ஒரு பிரத்தியேகமான பிரதேசம் அல்ல. அது ஏதோ உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம் மாதிரி எங்கேயோ

குறைந்தது. இருந்தாலும் ஆகாயத்திலே பறக்கமுடியவில்லை இப்போது நான் தெருவிலேயே பறப்பதுபோல ஆகிவிட்டது சார்'' என்றார். ''என்ன சார் ஆனது?'' என்றேன்.

''நான் கண்ணை மூடி தியானம் பண்ணிய போது என்பக்கத்தில் இருந்தவன் என் சைட் பொக்கற்றை வெட்டி விட்டான் சார்! அதுதான் சுமை குறைந்ததுஎன்று சொன்னேன். ''இப்போது நான் அவனைத் தேடித் தெருவில் பறந்துகொண்டிருக்கிறேன்'' என்றார். ●

தென்கச்சிகோ.சுவாமிநாதன்,

---

றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அகதிகள புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ. நல்லதம்பி பிரதம விருந்தினராகவும் இளைப்பாறிய கொத்தணி அதிபர் க. நடராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-75,246)

---

வைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான ஆக்கங்களை எழுதுபவர்கள் தங்கள் பெயர், முகவரி ஆகியவற்றை தனியான தாளில் எழுதிப் பிரதியோடு இணைக்க வேண்டும் என்றும், கடித உறையில் வலது மேல் மூலையில் எந்த போட்டிக்கான ஆக்கம் என்பதைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானொலி நாடகம் 20 நிமிடங்களுக்கு குறையாமலும், 05 பக்கங்களுக்கு மேற்படாமலும் பிரதி அமைய வேண்டும்.

கவிதை 03 பக்கங்களுக்கு

31-10-2002 இற்கு முன் புலிகளின் குரல் நிறுவனம் நடுவகப்பணியகம், யாழ் சாலை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப் படல் வேண்டும்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வசிப்பவர்கள் போட்டிக்கான தங்கள் ஆக்கங்களை விடுதலைப் புலிகளின் அந்தந்த மாவட்டச் செயலகங்களூடாகவோ அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

---

# சிங்கள - தமிழ் சிறார்களின் சமாதான ஒன்றிணைவு

## திருமறைக் கலாமன்றத்தில் இன்று

(ஈச்சமோட்டை)

சமாதானச் சூழலில் சிறுவர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தும் முகமாக இன்று திருமறைக் கலாமன்ற அரங்கில் சிங்கள- தமிழ் சிறுவர்கள் ஒன்றிணைந்து நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர்.

இந் நிகழ்வுகளில் பல்வேறுலை நிகழ்வுகளும் உரைகளும் இடம்பெறவுள்ளன.

இனங்களிடையே முரண்பாடற்றஒற்றுமையுடைய சமுதாயத்தை தோற்றுவிக்கும் நோக்குடனேயே இந் நிகழ்வுகள் இடம்பெறுவதாக யாழ். திருமறைக் கலாமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-59)

---

# கப்பல் போக்குவரத்து நவம்பரில்

(அரியாலை)

தூத்துக்குடி - கொழும்பு கபபல் போக்கு வரத்து எதிர் வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாக இருப்பதாக இந்திய மத்திய கப்பல் போக்குவரத்து இணை அமைச்சர் எல். திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சேவையை ஆரம்பிப்பதற்காக 65 இலட்சம் செலவில் பணிகள நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மணல் மேல் குடி,பாசிப்பட்டு, தனுஷ்கோடி ஆகிய இடங்களில் கலங்கரை விளக்கம் 5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-225)

---

# மகளிர் உரிமைகள் சர்வதேச உடன்பாடு இலங்கை கைச்சாத்திடும்

(கொழும்பு)

பெண்கள்உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் சர்வதேச உடன்பாடுஒன்றில்கைச்சாத்திட இலங்கைஅரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்திலும் இச் செயற்பாட்டை முன்னெடுக்கும் விதத்திலும் இலங்கை அரசாங்கம் செயற்படும்என்றார்.

மேற்படி பிரேரணையை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ கடந்த 25 ஆம் திகதி புதன் கிழமை அமைச்சரவையில் சமர்பித்தமை தெரிந்ததே.

(க-10)

## முஸ்லிம்களுக்கு இணையாக மலையக மக்களுக்கும் இடம்

# எமது கோரிக்கையை ஆதரிப்பது தமிழ்கட்சிகளின் வரலாற்றுக்கடமை

### மனோ கணேசன் எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

**வடக்குக் கிழக்கு சிங்கள, முஸ்லிம சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப் படும் அந்தஸ்து வட-கிழக்கு வெளியேவாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாடு புதியஒரு கோரிக்கையல்ல. எனவே, தாய்லாந்து பேச்சு வார்த்தை ஆரம்பமாகியுள்ள இச்சந்தர்ப்பத்தில் புதிய கோரிக்கைகள் முன்வைக்கப்படக்கூடாது என்ற நோக்கத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்களை புறக்கணிப்பது முறையல்ல.**

ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகளின்போது மலையகத் தமிழர்பற்றி பேசுவதற்கான அவசியம் இல்லை எனவே, உடனடியாக இந்திய வம்சாவளி பிரதிநிதிகள தாய்லாந்து செல்லவேண்டிய காரணமும் இல்லை. ஆனால், தேசிய இனப்பிரச்சினை முழுமையாக ஆராயப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போது இந்திய வம்சாவளி தமிழர்களின் அபிலாஷைகளை மலையகத் தமிழர் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இது முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவ அந்தஸ்துக்கு சமமானதாகும். எமது இந்த நிலைப்பாட்டின் நியாயத்தை தமிழ் கட்சிகளும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொண்டு ஆதரிக்க வேண்டும்.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும் மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

வட-கிழக்குத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் ஆரம்பம் முதல் ஆதரித்துவந்தார்கள். கடந்த ஆட்சியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று முத்திரை குத்திவிட அன்றைய அரசும், சில சர்வதேச சக்திகளும் முனைந்து நின்றன. அவ்வேளையில் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர் அவர்கள் விடுதலைப்போராளிகள் என வடகிழக்கு தமிழ் கட்சிகளுடன் இணைந்து இந்திய வம்சாவளி மலையக கட்சிகளும் வலியுறுத்தின.

போர்நிறுத்தத்தைவேண்டியும், புலித்தடையை நீக்கக் கோரியும் இந்திய வம்சாவளி தமிழர்கள் உரக்கக்குரல் கொடுத்தனர். இத்தகைய ஒரு வரலாற்றுப் பின்னணியில்இன்று நடைபெறும்பேச்சு வார்த்தையில் சிங்கள, வட-கிழக்குத்தமிழர், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசப்படும் போதும் இந்திய வம்சாவளி தமிழர்களின் அபிலாஷைகளும் ஆராயப்பட வேண்டும் என்ற எமது நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக குரலெழுப்புவதற்கு வட-கிழக்கு தமிழ் கட்சிகள் முழுமையாக இதுவரையில் முன்வராதது வேதனைக்குரியது.

தாய்லாந்தில் அரசிற்கும், புலிகளுக்கும் இடையில்பேச்சுவார்த்தை ஆரம்பமாகி விட்டது. இப்பேச்சுவார்த்தையின் பிரதான தரப்புகள் அரசும் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக இரத்தம் சிந்திப் போராடிய விடுதலைப் புலிகளும் ஆகும்.

இந்த அந்தஸ்து வேறு எவருக்கும் கிடையாது. தற்போது போரினால் வட- கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளை மாற்றி இயல்பு நிலையை ஏற்படுத்துவது சம்பந்தமாக பேச்சுகள் நடைபெறுகின்றன. இதை நாம் முழு மனதுடன் வரவேற்கின்றோம். பின்னாளில் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் மக்களுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

இதையும் நாம் வரவேற்கின்றோம். அதேவேளையில் முஸ்லிம் மக்களுக்கு இணையான சம அந்தஸ்து இந்திய வம்சாவளி மலையக தமிழர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் இந்த எமது கோரிக்கையை ஆதரிப்பது தமிழ் கட்சிகளின் வரலாற்றுக் கடமை.

கடந்த ஆட்சிக் காலத்தில் செயற்பட்ட பத்துத் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு அன்றைய அரசின் பயங்கரவாதத்திற்கும், திட்டமிட்டபிரசாரத்திற்கும் எதிராக துணிச்சலாக செயற்பட்டது. புலிகளின் விடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேச அங்கீகாரத்திற்கும் பத்துத் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு பாடுபட்டது.

இக் கூட்டமைப்பில் முழுமையாக பங்கெடுத்த தென்னிலங்கை தமிழர் அமைப்பு நமது கட்சி என்பதை இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பு கட்சித் தலைவர்கள் அறிவார்கள்.

வட-கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் இனப்பிரச்சினைக்குநிரந்தரதீர்வை கொண்டுவரும் புதிய அரசியல் யாப்பில் சேர்த்துக்கொள்ளப் படவேண்டுமென்ற கருத்தை எமது கட்சி எப்போதும் வலியுறுத்திவந்துள்ளது. இந்நோக்கில் வட-கிழக்கு மாநிலத்தில் முஸ்லிம், சிங்கள சிறுபான்மையினருக்கென அரசியல்சாசன ரீதியாக மேற்கொள்ளப்படும் சகல விசேட ஏற்பாடுகளும், மலையகம் உட்பட இலங்கையின் மிகுதிப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை அன்றைய தமிழ் கட்சிக் கூட்டமைப்பிற்கு எமது கட்சி சமர்ப்பித்திருந்தது. இப் பிரேரணையை பத்துத் தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது என்றுள்ளது.

(உ)

## ஆதரவாளர் மீது தாக்கு விசாரணை அறிக்கையை சட்டமா அதிபர் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கடந்தவருடம் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலின் போது பிரதியமைச்சர் சாகலரத்னாயக்காவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தியமை சம்பந்தமான விசாரணை அறிக்கையை குற்றப்புலனாய்வு பிரிவினர் சட்டமா அதிபர் கமல சபேசனிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர உட்பட இனந்தெரியாத குழு ஒன்று பிரதி அமைச்சரின் ஆதரவாளர்களை தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னாள் அமைச்சரையும், அவரது மெய்க்காவலர்களையும் விசாரணை செய்திருந்தார்கள். இது சம்பந்தமான அறிக்கையே சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(உ-8)

## சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களாக மூவர் நியமனம் பெற்றனர்

(கொழும்பு)

மூன்று பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

அரசாங்க சேவை ஆணைக் குழு இவர்களுக்கான இந் நியமனங்களை வழங்கியுள்ளது.

காமினி நந்தெனியா, இந்திரா டி. சில்வா, ஜயலிஸ்ஸ ஹேரத் ஆகியோருக்கே பொலிஸ்மா அதிபர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேசமயம், ஒரு மாத காலமாக நிரந்தரபொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படாததால் பொலிஸ் திணைக்கள நடவடிக்கைகளில் தாமதங்கள் ஏற்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(உ-8)

## அளவெட்டி அருணோதயா வெற்றியீட்டியது

(யாழ்ப்பாணம்)

மைலோ அகில இலங்கை பாடசாலைகள் ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி (14-வயதுப் பிரிவு) அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற போது, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ்மகாவித்தியாலயத்தை 1: 0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சாம்பியனாகியது.

இச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் இருந்து 10 பாடசாலைகள் பங்குபற்றின. இப்பாடசாலை அணிகளில் இருந்து யாழ். மாவட்ட அணிக்குத் தெரிவு செய்வதற்காக பின்வரும் வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அருணோதயாக் கல்லூரி

நா. பிரசாந், எஸ். கிருஷ்ண குமார், ப. பிரதீபன், க. ரஜீதன், இ. கஜேந்திரன், கே. கிருஷ்ணராஜ்

சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம்

எஸ். நிரோஜன், ஆர். அலமோகினன் ஏ. அருள்தாஸ் கே. ஜெயரட்ணம்

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

சி சருபன், கு. மாலவன், ந. பிரசாந்தராஜ், கு. நிதூரன்

யூனியன் கல்லூரி

வி. எம் எட்வேட் எஸ். யுவராஜா, வி. கேசவர்ணன், வை. கஸ்தூரன், கே. பிரசாந்தன்.

சென் ஜோசப் வித்தியாலயம்

ஆர். கனிஸ்தயான், ஜே. விஜித், ஜே. யூட்பிரசாந்தன், ஜே. ஜெபநேசன்.

விக்ரோறியா கல்லூரி

பா. சிவதாஸ், வ. சுபறாபன், கு. கணறாபன்,

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தி. தர்சன், செ. திலக்ஷ்சன், ப. சிம்சன் றோய், ச. அருள்ராஜ்ஜேசு.

யாழ்ப்பாணம் இந்து கல்லூரி

சு. சியாம்குமார், செ. பவசுதன், அ. இஜறாட் அன்ரன்.

(உ-10)

## சிறுவர்களைப் பாதுகாக்க பெரியோர்கள் முன்வர வேண்டும்

### மாவட்ட சிறுவர் பாதுகாப்புகுழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினம் இன்றாகும் இதையொட்டி மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினர் பத்திரிகை குறிப்பொன்றினை வெளியிட்டுள்ளனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

சிறுவர்களின் உரிமைகளுக்காகவும் அவர்களை துஷ்பிரயோகங்களில் இருந்து பாதுகாப்பதற்காகவும் சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கும் நாளாகின்றது

உலகம் பற்றிய விழிப்புணர்வற்ற வயதில் பல்வேறு காரணங்களுக்காக சிறுவர்களை துஷ்பிரயோகங்களுக்குட்படுத்தும் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தேசத்தைவழி நடத்தப் போகிறவர்கள். அவர்கள உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கும் வளர்வதற்கும் வகை செய்ய வேண்டியது சகல பெற்றோர்களதும், பெரியோர்களதும் கடமையாகும்.

எனவே, சிறுவர்களை வேலைக்கமர்த்தல் அவர்களின் உடல், உள பாதிப்பை ஏற்படுத்துமாறு தண்டனை வழங்கல், பாலியல் ரீதியாக துன்புறுத்தல் உட்பட சகல சிறுவர் துஷ்ப்பிரயோகங்களிலிருந்தும் சிறுவர்களைப்பாதுகாப்பதற்கு பெரியவர்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் நாளைய உலகின் தலைவர்கள் ஆளுமை மிக்கவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் உருவாக அவர்களுக்கு அவசியமான கட்டாயக்கல்வி உட்பட சகல உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க பெரியவர்கள் அனைவரும் இத்தினத்தில் திட சங்கல்பம் எடுக்குமாறு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழுவினராகிய நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-27)

## தாய்வானைச் சேர்ந்த வர்த்தகப் பிரதிநிதிகள் 20 பேர் இலங்கை வருவர்

(கொழும்பு)

தாய்வான் வர்த்தக பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த மாதம் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை வர்த்தக சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இக்குழுவில் தாய்வானைச் சேர்ந்த 20 வர்த்தக பிரமுகர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இங்குள்ளவர்த்தகப் பிரதிநிதிகளுடன் இருநாடுகளுக்கிடையிலான வர்த்தகநடவடிக்கைகள் குறித்து இவர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

(உ-8)

# உலக சிறுவர் தினம்

## ஒக்டோபர் 01

உலகெங்கிலும் உலக சிறுவர் தினம் ஒக்டோபர் 01ம் திகதி கொண்டாடப்படுகின்றது. காலமாற்றத்திற்கேற்ப சிசேரியன் எனப்படும் அறுவைச் சத்திரசிகிச்சை மூலம் குழந்தைகளைப் பிரசவித்தல் சர்வசாதாரணமாகிவிட்டது

**சிசேரியன் செய்வதற்கான காரணங்கள்**

1) தாயின் ஆபத்து நிலை:-
   *உதாரணம்:- அதிகுருதியமுக்கம்*
2) குழந்தையின் ஆபத்துநிலை:-
   *உதர்ரணம்:- குழந்தை துடிப்பு க் குறைதல்*

சிசேரியன் முறை மூலம் தான்பிள்ளை பிரசவிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதை அனுபவம் மிக்க வைத்தியர்கள் தீர்மானிப்பர் சிசேரியன் முறை மூலம் பிள்ளை பிரசவிக்க முன்னர் தாய்க்கு மயக்க மருந்து கொடுக்கப்படும். வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தில் ஒவ்வொரு பிரசவமும் கூடுதல் கவனத்துடன் கையாளப்பட்டுக் கவனிக்கப்படுகின்றது.



சிசேரியன் - வயிற்றுப் பாகத்தில் மெதுவாக அடையாளமிடப்பட்டுப் பிரிக்கப்படுகின்றது.



குழந்தையின் தலை வெளியே காணப்படுகின்றது.



குழந்தை பிரசவிக்கப்படுகின்றது.



தொப்புள் கொடி வெட்டப்படுகின்றது




குழந்தை கையளிக்கப்படுகின்றது.



நஞ்சுக் கொடி வெளியேற்றப்படுகின்றது.



தாயின் கர்ப்பப்பை தோல் என்பன தைக்கப்படுகின்றன.



அனைத்தும் முடிவுற்ற பின்



பூமிக்கு வந்த புனிதம் - குழந்தை

மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்

## நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துமாறு

# ஜனாதிபதிக்கு ஆதரவாளர்கள் அழுத்தம்

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களும் அமைப்பாளர்களும், ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை உபயோகித்து அரசாங்கத்தை கட்டுப்பாட்டில்வைத்திருக்கும் படி ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவைவற்புறுத்திக் கேட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அநுராதபுரத்தில் மிலேனியம் ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு விட்டு, கட்சியின் அமைப்பாளர்களையும் ஆதரவாளர்களையும்சந்தித்துஉரையாடும் போதே, அவர்கள் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டதாக தெரியவருகிறது.

இச்சந்திப்பின் போது அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கட்சி அமைப்பாளர்கள் சிலர் தன்னிச்சையாக செயற்படுவதையிட்டு ஜனாதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அநுராதபுர மாவட்டபாராளுமன்றஉறுப்பினர் எஸ் எம். சந்திர சேன இச்சந்திப்பில் கலந்து கொள்ள வில்லை.

கட்சிக்குள் செயற்படும் சில காடையர்கள் தன்னைத் தாக்கப்போவதாக அச்சுறுத்தல் விடுத்திருப்பதனால் இச் சந்திப்பில் தன்னால் கலந்து கொள்ள முடிய வில்லைஎன கடித மூலம் அவர் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தமிழர் தாயகத்தில் கல்வி அபிவிருத்தி

(கிளிநொச்சி)
தமிழர் தாயகத்தில் கல்வி அபிவிருத்திக்கான தேவைகள் நிலவும் குறைபாடுகள் பிரச்சினைகள் பற்றிய திட்டமிடல் அமர்வு கடந்தவெள்ளியன்று கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையில் நடைபெற்றது.

தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் வடபகுதி கல்விவலயங்களின் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் மாகாணக் கல்விஅதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ)

## நேவிச்சந்தி வரை பஸ் போக்குவரத்துக்கு அனுமதி

(காரைநகர்)
காரைநகர் 'நேவிச்சந்தி' வரைக்கும் வடபிராந்திய போக்கு வரத்துச்சபைபஸ்கள் சென்று வருவதற்குகாரைநகர் கடற்படையின் பொதுசனமக்கள் தொடர்பு அதிகாரி அனுமதி வழங்கியுள்ளார்.

அண்மையில்இப்பகுதிகிராம சேவையாளருடன் நடத்திய சந்திப்பின் போது இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் காரைநகர் கடற்படைத் தளத்தை அண்டிய கிராமங்களில் மீளக் குடியமர்வோரிற்கு போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்கும் நோக்குடனேயே இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் இக்கிராமங்களிற்கு ஒரு கிலோ மீற்றறிற்கு முன் உள்ள வியாவில் கிராமம் வரை பஸ் சேவை இடம் பெற்றதுகுறிப்பிடத்தக்கது.

இப்போக்குவரத்து வசதியினை அடுத்து மீளக்குடியமர்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-246)

# சூடாநாட்டு விளையாட்டு வீரர்கள் ஒழுக்க சீலர்களாக திகழ்கின்றனர்

### தேசிய உதைபந்தாட்ட பயிற்றுநர் சுமித் பாராட்டு

(சுண்டுக்குளி)
யாழ் மாவட்ட விளையாட்டு வீரர்கள் ஒழுக்க சீலர்களாகவும், சொல்லிக கொடுப்பவற்றை உடன் கிரகிக்கக் கூடிய ஆற்றல் உடையவர்களாகவும் உள்ளனர் என்று தேசிய உதைபந்தாட்டப் பயிற்றுநர் சுமித் வல்பொல பாராட்டியுள்ளார்.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாமின் நிறைவு நாளன்று பயிற்றுநர்களைப் பாராட்டும் வைபவம் சுப்ரின்டி.ஏ.எல். குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

உதைபந்தாட்டப் பயிற்சி அளிப்பதற்காக நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் நான் சென்றுள்ளேன். அங்கெல்லாம் கிடைக்காத புதிய அனுபவத்தை யாழ்ப்பாணத்தில பெற முடிந்தது.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது, பயிற்சி பெற்று உயர்ச்சி பெற வேண்டும் என்கின்ற அவா உடையவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.

இவர்களுக்கு உரிய முறையில் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் உலகத்தரத்துக்கு உயர்த்த முடியும் என்று குறிப்பிட்டார்.

மேலும், நான் முன்னர் வந்தபோது பார்த்துப் பாவசம் அடைந்த யாழ்ப்பாணம் இன்று உள்நாட்டு யுத்தத்தினால் சீர் குலைந்து உருத் தெரியாது மாறியுள்ளது என்று கவலை தெரிவித்தார். (உ-110)

## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)
வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் 68 மாணவர்களிற்கு பாட நூல்கள் மற்றும் கற்றலுக்கு தேவையான உபகரணங்கள் வாங்குவதற்காக 39 ஆயிரம் ரூபா நிதியை திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் பல்வேறு பகுதிகளுக்கும் பகிர்ந்து வழங்கியுள்ளனர்.

இதன்மூலம் சங்கானைப் பகுதியில் 23 வறிய மாணவர்களும, கோப்பயில் 14 மாணவர்களும், யாழ்ப்பாணத்தில் 6 மாணவர்களும உடுவிலில் 6 மாணவர்களும் சண்டிலிப்பாயில 5 மாணவர்களும் கரவெட்டியில் 8 மாணவர்களும் பருத்தித்துறையில் 6மாணவர்களும்பயன்அடைந்துள்ளனர்.

யாழ். வளர்ப்பு பெற்றோர் சங்கம், இதற்குஅனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதன்தொடர்ச்சியாகமேலும் சாவகச்சேரி, வேலணை, ஊர்காவற்றுறை பிரதேசங்களில் வாழும் சுமார் 30 மாணவர்களுக்கு இது போன்ற கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (உ-10)

## தனிமையில் இருந்த யுவதி கொடூரக் கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவடிவேம்புபிரதேசத்தைச்சேர்ந்த யுவதி ஒருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு பின் கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவடிவேம்பு பிரதேசத்தில்வாழ்ந்து வந்த எஸ். சுதாமலர் என்ற யுவதியே நேற்று முன்தினம் இரவு இவ்வாறு கொடூரமாக கொல்லப்பட்டுள்ளார்.

தாய் தந்தையாரை இழந்த நிலையில் தனது பாட்டியுடன் வாழ்ந்துவந்த இவ் இளம் பெண் தனிமையாக இருந்த வேளையே இளைஞர் ஒருவரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான சந்தேக நபரை தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இக்கொலைச் சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது அத்துடன் மேற்படி யுவதியின் சடலம் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ- 10)

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரின் தாக்குதல் குறித்து அறிக்கை

(கொழும்பு)
ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினரால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் மூன்று குற்றச் செயல்கள் பற்றிய அறிக்கைகளை இரகசியப் பொலிஸார் சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

பாடகர்களான றூக்காந்த சந்திரலேகா தம்பதியினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதல சம்பவம், ஐ கிய தேசியக் கட்சியின் ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது செய்தித்தாள, புகைப்படபிடிப்பாளர் ஒருவர் தாக்கப்பட்டமை மற்றும் திரைப்பட நடிகை அனோஜா வீரசிங்காவின் வீட்டுக்கு தீ வைத்து கொளுத்தியமை சமபந்தமான விசாரணையின்ஒரு பகுதி அறிக்கைகளே சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுளளது.

இச் சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் முன்னாள் ஊடக ஆலோசகர் சரத் குணதிலகா, பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்பகுமார ஆகியோரிடமிருந்தும் இரகசியப் பொலிஸார் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர்.

இந்த விசாரணை தொடர்பாக இரகசியப் பொலிஸார் சட்டமா அதிபரிடம் ஆலோசனையை பெறுவதென உத்தேசித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (க-8)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விளையாட்டுத் துறையினரால் கராத்தே துறையை மேம்படுத்தும்நோக்குடன் எதிர்வரும் 6 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஓ.எல்.ஆர். தேவாலய ஜெரோம் மண்டபத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத கராத்தேசங்கங்களின் அனைத்து பிரதமஆசிரியர்கள், கறுப்புப்பட்டி ஆசிரியகள் கராத்தே ஆர்வமுள்ள ஏனைய வீர விளையாட்டு, சாகச விளையாட்டு அமைப்புக்கள், கழகங்கள் அனைத்துக்குமான முக்கிய கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட அனைவரையும்தவறாது சமுகம்தரும் படி தமிழீழ விளையாட்டு துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ)

## புலிகள்- சிங்கள மக்கள் சமாதான கருத்து பரிமாறல்

(கிளிநொச்சி)
போரினால் கொழும்பு பண முதலைகள் கொழுத்தனவே தவிர ஏழைகளின் வாழ்வு தொடர்ந்தும் பின்தங்கியே சென்றது.

சிங்கள மக்களுக்கான போர் என காலத்துககுக் காலம் ஆட்சிக்கு வந்தவர்கள் கூறிக் கொண்டார்கள். ஆனாலும் ஒரு துண்டு நிலம் தானும் இன்றி வாடகை நிலங்களில் வாடும் சிங்கள மக்களை எவரும் திரும்பிப் பார்க்க வில்லை.

தென்பகுதியில் இருந்து கிளிநொச்சிக்கு சமாதானச் சுற்றுலா மேற்கொண்ட வறிய மக்களுக்காக உழைப் போர் அமைப்பினர் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச் செல்வன் மற்றும் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்து சமாதானக் கருத்துப்பரிமாறல்களை மேற்கொண்ட வேளை மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு, சிலாபம், யாகல, வத்தளை ஆகிய இடங்களைச் சேர்ந்த 40 பேர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மேற்படி குழுவினர் ஆனையிறவைச் சென்று பார்வையிட்டதுடன், மடுவுக்கும் சென்றனர். (உ-7)

## குடிநீரின்றி வாட்டம்

கரவெட்டி அத்துளுஅம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்த குழாய்கிணறுகள் பழுதடைந்துள்ளமையினால் இப் பகுதி மக்கள் குடிநீரைப்பெற மிகுந்த சிரமப்பட்டுவருகின்றனர்.

இப்பகுதி நன்னீர் கிணறுகளும் வரட்சி காரணமாக வற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-41)

சர்வதேச முதியோர் தினத்தை ஒட்டிய கவிதை

## முதியவர் தேசியச் சொத்து

வாழ்வெனும் பாதையில் பருவநிலைகள் பலவாகும்
மழலையாய் சிறுவராய் மகிழ்வது ஒருகாலம்
வளம்மிகு இளமையின் இனிமையில் சிலகாலம்
குழந்தைகள் பெற்று கடமைகள் ஏற்று
சொல்லரிய காப்பரணாய் தலைவனாய் இடைக்காலம்
வில்லாக வளைத்து தம்மை திரியாக எரித்து
எல்லோரும் உயர்வுபெற ஏற்றம் தந்து
பொல்லாத முதுமையிலே தள்ளாடும் இறுதிக் காலம்

முன்னைய பருவத்தை மகிழ்வுடன் ஏற்பதும்
பின்னைய முதுமையை புறந்தள்ளி வாழ்வதும்
உன்னுள் இல்லையா? ஒருகணம் சிந்தி!
காய்கறி பழங்கள் முதிர்தவை வேண்டும்
மன்னுயிர் மட்டும் மூப்படைந் திட்டால்
இன்னுமேன் இருப்பு தொலைந்து போ என்பார்
செல்வங்கள் அல்ல நாட்டின் தேசியச் சொத்து
செல்வங்கள் குவித்த முதியோரே எம் தேசியச் சொத்து

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

அன்பின்வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல்போர்த்தஉடம்பு.
குறள்

வலம்புரி

## சிறுவர் முதியவர்

சர்வதேச சிறுவர் முதியோர் தினம் இன்றாகும். சிறுவர்களின் உரிமைகளையும் முதியவர்களின் பராமரிப்பையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்குமுண்டு. சிறுவர்களைப் பொறுத்தவரை அவர்களின் உரிமை விடயத்தில் இன்னமும் பின்தங்கிய நிலைமைகள் காணப்படுகின்றது.

சிறுவர்களைவேலைக்கு அமர்த்துதல், பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்துதல், அவர்களின் வயதிற்கு அப்பாற்பட்ட வேலை பளுவைச் சுமத்துதல், அடக்கி ஆளுதல் போன்ற பல்வேறு விடயங்களில் சிறுவர்கள் நசுக்கப்படுகிறார்கள்

குறிப்பாக வறுமையும் கல்வியறிவுமற்ற குடும்பங்களில் சிறுவர்களின் உரிமை மோசமாகப்பறிக்கப்படுகிறது. எவரிடமும் தமது துன்பங்களைக் கூறிப் பரிகாரம் தேட முடியாத சிறுவர்களைச் சமகாலச் சமூகம் நல்ல முறையில் பராமரிக்கத் தவறுமாயின் அதன் விளைவு எதிர்காலத்தில் பழிதீர்க்கும் வஞ்சகம் நிறைந்த, மன விரக்தியடைந்த சமூகம்உருவாகுமென்பதில் எந்த ஐயமும் இல்லை. எனவே சிறுவர்களின் உரிமையைப் பாதுகாப்பதில் பொது அமைப்புகள் நடவடிக்கை எடுப்பதற்கு மேலாக, ஒவ்வொரு பெற்றோரும் தத்தம் பிள்ளைகளை நல்ல முறையில் பராமரிப்பார்களாயின் சிறுவர்கள் மூலைக்குள் குந்தியிருந்து விம்மி விம்மி அழுகின்ற பரிதாபமோ அன்றி ஏக்கம் கலந்த பயமோ ஏற்பட வாய்ப்பில்லை.

இதுஒருபுறமாக இருக்க மறுபுறத்தில், எமது பெரும் சொத்தாக இருக்கின்ற முதியவர்களைப் பராமரிக்கின்ற பெரும் பணியை ஒவ்வொருவரும் செய்வது மிக மிக அவசியமாகும். முதியவர்களை ஏசுதல், அவர்களின் மனம் புண்பட நடத்தல், அவர்களின் வார்த்தைக்கு மதிப்புக் கொடாமை போன்ற செயல்களால் முதியவர்கள் மனமுடைந்துபோகிறார்கள். அதேநேரம் சில இடங்களில் முதியவர்களுக்கு வேளாவேளைக்கு உணவு கொடுக்கப்படாத துன்ப நிகழ்வும் நம் சமூகத்தில் நடைபெறுகின்றது. இந்நிலைமை அடியோடு அகற்றப்படவேண்டும். முதியவர்களை நம் கண்கண்ட தெய்வங்களாகப் போற்ற வேண்டும்.

# உடல் சோர்வுக்கு வயது முக்கிய காரணமன்று

# முதுமைபற்றிய பயமும் கவலையுமே காரணம்

## மருத்துவ விளக்கம்

டாக்டர்
எம். கே. முருகானந்தன்
எம். பி. பி, எஸ் (இலங்கை)

ஒருவர் வயது 68, மனைவியை அண்மையில் இழந்துள்ளார். மகள் குடும்பத்தினருடன் வசிக்கிறார். பிரஷர் தவிர வேறுகடும் நோய்கள் கிடையாது. ஆனால் அண்மைக்காலமாக உடல் தளர்ந்துகொண்டுவருகிறது. பசி குறைவு, உணவு வகைகளை உண்பதிலும் நாட்டமில்லை. தூக்கமும் குறைவு, வெளியே உலாவப் போவதிலும் நாட்டமில்லை, சோர்வு அதிகம் என்கிறார். இவையெல்லாம் வயதானதின் அறிகுறி என்று பலரும் சொல்வார்கள். இத்தகைய உடற் பிரச்சினைகளுக்கு வயது காரணம் என்று கூறுவதற்கு இல்லை ஏனெனில் மருத்துவ வசதிகளும், வாழ்க்கை வசதிகளும் அதிகரித்து விட்ட இன்றைய உலகில் 68 வயது என்பது அதிகமானது என்று சொல்ல முடியாது, நிச்சயம் மீண்டும் உடல் ஆரோக்கியம் பெற்றுத் திடமாக வாழலாம்.

### மனச் சோர்வு

இவருக்கு உடலை விட மனது தான் சோர்ந்து விட்டது. மனைவியின் மரணம், முதுமை பற்றிய பயம், தனிமை உணர்வு ஆகியன ஒன்று சேர்ந்து மனச்சோர்வு நோய் ஏற்பட்டிருக்கலாம். ஒரு நல்ல டாக்டரை அணுகி மனச் சோர்வு நிலையை ஆலோசனைகளுடன் மட்டும் தீர்த்து விடலாமா அல்லது மருந்துகளை உட்கொள்ள வேண்டுமா என்பதை நேரில் பரிசோதித்துப் பார்த்துத் தான் தீர்மானிக்க வேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கையை வளர்த்து, தனிமையில் சோர்ந்து கிடக்காமல், உணவிலும், நாளாந்த வாழ்க்கை முறைகளிலும் ஒரு பிடிப்பை ஏற்படுத்துதல் நலமாகும்.

முதுமையில் மற்றவர்களுக்குப பாரம் என எண்ணாதீர்கள். உங்கள் வயதும் அனுபவங்களும் மற்றவர்களுக்குப் பல வழிகளில் உதவக்கூடும். எனவே, மற்றவர்களுடன் சேர்ந்து பழகுங்கள். அவர்களுக்குள்ள பிரச்சினைகளைக் காது கொடுத்து கேளுங்கள். உங்கள் அனுபவங்களும, ஆற்றலும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க உதவியாக இருக்கும.

### நட்பை வளருங்கள்

உங்களை மதிக்கின்ற, உங்களது கருத்துக்களைக் காது கொடுத்துக் கேட்கின்ற நண்பர்களுடனும், உறவினர்களுடனும அதிக நேரத்தைச் செலவிடுங்கள். ஒரு வேளை உங்கள் குடும்பத்தவர்களுக்கு உங்களுடன் ஆறுதலாகப் பேசுவதற்கு போதிய நேரம் கிடைக்கவில்லை எனில் உங்கள் வயதொத்த நண்பர்களை நாடுங்கள். மாலை நேரங்களில் அத்தகையோருடன் கூடிப் பேசி மகிழுங்கள்.

### ஆன்மீகம்

ஆன்மீக ஈடுபாடு உடையவராயின் தினம் சில மணித்துளிகளை வழிபாட்டிற்கு ஒதுக்குங்கள். நீங்கள் எந்த மதத்தவராயினும் உங்கள் மத வழிபாட்டுத் தலத்திற்கு வாரம ஒரு முறையாவது செல்லுங்கள். தினமும் சென்று அங்கு ஏதாவது உதவிப் பணிசெய்யலாமே.

### சேவை

நீங்கள் சேவை உணர்வு உள்ளவராயின், உங்கள் பகுதியில் உள்ள சேவை நிறுவனம் ஒன்றில் சேர்ந்து உங்களால் இயன்ற சேவைப பணிகளைச் சமூகத்திற்கு வழங்கலாம். சேவை என்பதுஉடலால் மாத்திரமின்றி, மனத்தாலும், வார்த்தைகளாலும் கூடச் செய்யக்கூடியது. உங்கள் பகுதியில் உள்ள நோயுற்றவர்களது வீடுகளுக்குச் செல்லுங்கள். அவர்களது நலம் பற்றி விசாரியுங்கள். அவர்களுக்குச் சில தேறுதல் வார்த்தைகள் கூறுங்கள், சேவையை உங்கள் வீட்டிலும் ஆரம்பிக்கலாம். வீட்டு வேலைகளில் ஒத்தாசையாக இருப்பதுடன் கடைத் தெருவுக்குப் போய் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி வாருங்கள். உங்கள் வீட்டிலோ அருகிலோ உள்ள குழந்தைகளுக்கு ஏதாவது வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுக்கலாம். இப்படி எத்தனை, எத்தனையோ பணிகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. எனவே, சோர்வை விட்டு விட்டு உற்சாகமாக ஆரம்பியுங்கள்

### முதுமையில் உணவு

முதுமையில் உணவு அதன் அளவில குறையலாம் தரத்தில் அலல. வயது வந்தவர்களுக்கெனத் தனியான உணவு முறை எதுவும கிடையாது. கடந்த 60, 65 வருடங்களாக எதை உண்டீர்களோ அதையே தொடர்ந்தும் உண்ணலாம். ஆயினும் உங்களது உணவுத்தேவை இப்பொழுது சற்றுக்குறைந்திருக்கலாம், கடினமான வேலைகள் செய்த காலத்தில் உண்ட அதே அளவு உணவை வேலை குறைந்த 68 வயதில் உட்கொள்ள முடியாது. உண்ணும் உணவின் அளவு குறைந்து விட்டாலும், அது நிறைவான சத்துள்ள உணவாக இருக்கவேண்டும். அத்துடன் விரைவில் சமிபாடு அடையக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

முதுமையில் இரத்தச் சோகையும, கல்சியக் குறைபாடும் அதிகம் இருப்பதால் அதற்கு ஏற்ற உணவுகளை உண்பது நல்லது, கீரை வகைகளில் நிறைய இரும்புச்சத்து உள்ளது. அத்துடன் கல்சியம் ஓரளவு கிடைக்கிறது, எனவே தினமும் உணவில் ஏதாவது ஒரு கீரை வகையைச் சேருங்கள, சர்க்கரை, தேன், பேரீச்சம பழம் இறைச்சி வகைகளிலும் இரும்புச் சத்து அதிகம் கிடைக்கிறது. தினமும் பால் அருந்தவேண்டும். அதிலுள்ள கல்சியம் சத்து எலும்புகளையும், பல்லையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். அத்துடன் தினமும் ஏதாவது பழமும் சேர்க்கவேண்டும், அதிலுள்ள விற்றமின் C தவிர, நார்ப்பொருள மலச்சிக்கல் ஏற்படாமல் தவிர்க்கும், இரவில் தேநீர் அல்லது கோப்பி அருந்துவதைத் தவிர்க்கவேண்டும. அது தூக்கத்தைக் கெடுக்கும். படுப்பதற்குமுன் சூடான ஒரு கப் பால் அருந்தினால் மிகவும் நல்லது.

புரதச் சத்து அதிகமுள்ள கடலை, கௌப்பீ, பயறு, உழுந்து, சோயா போன்றவற்றை உணவில் சேர்ப்பது நல்லது. இவற்றை ஊறப்போட்டு முளைக்க விட்டுச் சமைத்தால். விரைவாகச் சீரணமடையும், அல்லாவிடில் நன்றாக அவிக்கவேண்டும, காளான்களையும் வயதானவர்கள் உணவில் அதிகம்சேர்த்துக் கொள்ளலாம். ஏனெனில் காளான்களில் புரதச் சத்தும், விற்றமின்களும், கனியுப்புகளும் அதிக அளவில் உள்ளது உலர்ந்த காளானில் புரதசத்து 33 சதவீதம் அளவில் உள்ளது எனச் சொல்கிறார்கள்.

### உணவு கண்களையும் கவரவேண்டும்

உணவுசத்துள்ளதாக ருசிகரமாக இருந்தால் மட்டும் போதாது அது கண்களைக் கவர்வதாகவும் இருக்கவேண்டும். எனவே, அழகான தட்டுகளில் வைத்து உண்ணுங்கள். மகிழ்ச்சியான சூழலில் மெதுவாக உண்ணுங்கள். தனிமையில் அமர்ந்து உண்ணாமல் மற்றவர்களுடன் சேர்ந்து உண்பது நல்லது. டொனிக் எதுவும் குடிக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் உண்ணும் உணவில் உள்ள போசாக்குகளை விட மேலதிகமாக அவை எதனையும்கொடுக்கப்போவதில்லை. அதற்குச் செலவழிக்கும் பணத்தை நல்ல உணவிற்குப் பயன் படுத்துங்கள்.

மற்றவர்களில் தங்கியிருக்காது, சுதந்திரமாக உங்களால் நீண்டகாலம் இயங்கமுடியுமாயின் அதையே ஆரோக்கியமானசுறுசுறுப்பானமுதுமை எனலாம். ஆனால் வயது அதிகரிப்பு பல உடல் ரீதியான மாற்றங்களைக் கொண்டுவரலாம். உங்கள் [illegible] பலமிழக்கலாம். அல்லது ஒருபக்கமே செயலிழந்து இருக்கலாம், அல்லது கைநடுக்கமிருக்கலாம். இவற்றால்மனம் தளர்ந்து விடாதீர்கள். உங்கள் நீண்டவாழ்வில்எத்தனை பிரச்சினைகளையும், சிக்கல்களையும் எதிர்கொண்டு வெற்றி கண்டிருப்பீர்கள். அந்த அனுபவங்கள் உங்களுக்குக் கைகொடுக்கும்.

வயதானநிலையில்கைத்தடி உபயோகிக்கலாம், கைத்தடி உங்களுக்கான அலங்காரப் பொருளுமல்ல, உங்கள் இயலாமையைப் பறை சாற்றும் அவமானச் சின்னமுமல்ல. பலங்குன்றிய அல்லது வலது குறைந்தவர்களுக்கான உதவிக்கரம். அது மூன்றாவது காலாகச் செயற்பட்டு நீங்கள நடக்கும் போதும், நிற்கும் போதும், சமநிலையைப் பேணி உங்களை விழவிடாமல் தடுக்கும். மற்றவர் உதவியின்றி உங்களால் இயங்கமுடியும் என்ற நம்பிக்கை வந்துவிட்டதா? இயன்ற அளவு சுதந்திரமாக இயங்குங்கள். ஆனால் அவசியம் ஏற்படும்போது மற்றவர்கள் உதவியை பெறத்தயங்கவோ, வெட்கப்படவோ வேண்டாம். □

## தினசரி தியானம்

### ஆன்மாவை உணருங்கள்

உண்மையான ஆன்மா, நமது ஆசைகளாகிய மேகங்களுக்குப் பின் மறைந்திருக்கிறது. ஆன்மாவின் இருண்ட பகுதி ஐம்புலன்களின் உதவியுடன் வேலை செய்வதால், உண்மையான ஆன்மாவின் விருப்பம் வெளியே மறைக்கப்பட்டிருக்கிறது. இருண்டிருக்கிற ஆன்மாவை வென்று இறைவனது பேரருளை அனுபவிப்பதற்காக இந்தச் சிக்கலான முடிச்சை அவிழ்க்கும் தைரியம் கொள்ளுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## மக்களின் வாழ்க்கைச் செலவைக்குறைக்கும்பணி படிப்படியாக நடைமுறை

(கொழும்பு)

வாழ்க்கைச்செலவைகுறைப்பதற்கான பிரேரணைகளை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதற்கிணங்க ஒருலீற்றர் தேங்காய் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் மீதுவிதிக்கப்பட்டிருந்த 5 ரூபா சுங்கத்தீர்வை நீக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எண்ணெய் உற்பத்தி செய்வதற்கென கொப்பறாவை இறக்குமதி செய்யப்படும் போது விதிக்கப்பட்டிருந்த 25சதவீதசுங்கத்தீர்வை 10 சதவீதத்தால் குறைக்கப்பட்டுளளது.

தவிர, தகரத்தில் அடைக்கப்பட்ட ரின் மீன், கருவாடுஎன்பனவற்றின் மீது விதிக்கப்பட்ட 10சதவீதசுங்கத்தீர்வையும் 20 சதவீத மேலதிக வரியும் ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்துஇப்பொருள்களின் கட்டுப்பாட்டுவிலைகள் வீழ்ச்சியடையவுள்ளன.

உணவுப் பாதுகாப்பு சம்பந்தமான அமைச்சர்களின் குழுவின் தலைவர் கே.எச் ஜே. விஜயதாஸ வாழ்க்கைச் செலவை குறைக்கும்நோக்கில் மேலும் பல பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு வருவதா தெரிவித்துள்ளார். (உ- 8

## நண்பர்களின் கேலியால் இளைஞன் தற்கொலை

(புலோலி)

ஒரு கண் பார்வையற்ற இளைஞன் ஒருவர் நண்பர்கள் கேலி செய்தமையால் விரக்தியடைந்து கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இப் பரிதாப சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை கரவெட்டி மத்தொனிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவன் க.பிரபாகரன் (வயது 24) என்ற இளைஞனே மரணமானவராவார்.

மரண விசாரணை நடத்திய வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியன் குரல்வளை நசியுண்டு மூச்சுத் திணறியதால் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப் பளித்தார். (இ)

## நியமனம்...

இவர்கள் அனைவருக்குமான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9மணிக்கு பௌதிக விஞ்ஞான விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் சகல பீடாதிபதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். நியமனம் பெற்ற சகலரையும் இக் கலந்துரையாடலில் பங்கு கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## தட்சணாமருதமடுப் படுகொலை மன்னார் நீதிமன்றில் விசாரணை

(வவுனியா)

தட்சணா மருதமடுப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மன்னார் நீதிமன்றில் நடைபெற்றது.

இப் படுகொலை தொடர்பான சந்தேகநபர்கள் 13 பேரையும் எதிர்வரும் 14ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் பாரூக் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த யூலை மாதம் மன்னார் தட்சணா மருதமடு குளத்தருகே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

கொலை செய்யப்பட்ட மூவரினதும் சடலங்கள் பேராதனைப் போதனா வைத்திசாலையில் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப் பட்டதுடன் பிரேத பரிசோதனை தொடர்பான அறிக்கை நேற்றைய தினம் நீதிமன்றில் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி படுகொலைச் சம்பவம் தமிழீழ நீதிமன்றத்தின் நியாதிக்க எல்லைக்குள் இடம் பெற்றிருப்பதால் கொலைச் சந்தேக நபர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஏற்கனவே கோரியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (த)

## நமது...

அறிவுத்திறனை வளர்த்து மனிதனை முழுமையடையச் செய்யும் பத்திரிகைகள்,, சமூகத்தை விழிப்படையவும் செய்கின்றன.

இவ்வகையில் இன்று முதல் வெளிவரும் ''நமது ஈழநாடு'' பத்திரிகையின் வரவுக்கு வலம்புரி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது. (இ)

## அன்ரன்...

யத்தை வந்தடைந்து அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் வன்னி செல்வார் என்று நம்பப்படுகிறது. (உ)

## மானிப்பாய்...

விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். பொலிஸாரும் சம்பவத்தை நேரில் வந்து பார்வையிட்டனர். (இ)

## தமிழீழ...

வேண்டும். புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு இணங்க படையினர், பொதுக் கட்டடங்கள் மற்றும் மக்கள் வாழ் விடங்களை விட்டு முற்று முழுதாக வெளியேறவில்லை என்று தெரிவித்த சு.ப.தமிழ்ச்செல்வன் அர்ப்பணிப்பும், தியாகமும் நிறைந்து பெற்ற இச் சூழலை நாம் கவனமாகப் பயன் படுத்த வேண்டும் என்று கூறினார்.

இம் மாநாட்டில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

சட்ட விரோத மது விற்பனை, சிறுவர் மீதான பாலியல் துன்புறுத்தல், சிறுவயதுத் திருமணம், தொழில் நிறுவனங்களில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவு அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி மேற் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இம் மாநாட்டில் வடக்குக் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் அமைப்புப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். (ம)


**அன்பு மாணவர்களே!**

உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவராத்திரிக் காலத்தில் வலம்புரியில் வெளிவரும்

**நவராத்திரி பாமாலைக்கு**

4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை அனுப்பி வையுங்கள்.

மு.குறிப்பு: மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப் படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :-

''நவராத்திரி பாமாலை''
வலம்புரி
இல.15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.



**ஒக்ரோபர் - 01**

**சர்வதேச சிறுவர் தினம்!**

இன்று கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்தில் அனைத்து சிறுவர்களும் தம் உரிமைகளைப பெற்று சுபீட்சத்துடன் வாழ எமது வாழ்த்துக்கள்.

உங்கள் தொடர்புகட்கான எங்கள் முகவரி:.
அறை எண் 30
யாழ் போதனா வைத்தியசாலை -மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு-

[C/5047]


ஐ.சி.சி. யின் இறுதி ஆட்டம் நேற்று

## கிரிக்கெற் மைதானத்தில் நாய் புகுந்து அமர்க்களம்!

(கொழும்பு)

கொழும்பு பிரமேதாஸா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான ஐ.சி.சி. கிரிக்கெட் இறுதியாட்டம் விறுவிறுப்பாக இடம் பெற்றுக் கொண்டிருந்த போது மைதானத்தில் தீடீரென நாய் ஒன்று புகுந்து பெரும் அமர்க்களப்படுத்தியது.

சுறுசுறுப்பாக ஆடிக்கொண்டிருந்த வீரர்கள் ஆட்டத்தை இடை நிறுத்தி விட்டு மைதானத்தில் அமர்ந்து கொண்டனர்.

நாயைத் துரத்தும் பணியில் ஏற்பாட்டாளர்கள் ஈடுபட்ட போதும மைதானத்தில் நிறைந்திருந்த சனத்திரளினால் நாய் வெருண்டு அங்கும் இங்கும் பாய்ந்தோடி அனைவரையும் வெருட்டியது.

கிரிக்கெட் ஆட்டத்தை தமது கமராவுக்குள் அடக்க வந்த வீடியோக் கமராக்கள் சில நிமிடங்கள் நாயின் சாகஸத்தை கமராவுக்குள் அடக்கின.

இதேவேளை நேற்றைய இறுதி ஆட்டத்தைதொலைக் காட்சியில் சுவாரசியமாக பார்த்துக் கொண்டிருந்த யாழ் ரசிகர்கள் தீடீரென மின்சாரம் நின்றதால் கொதிப்படைந்தனர். இதனால் கிரிக்கெட் ஆட்டத்தை முழுமையாகப் பார்க்க முடியவில்லை என்று கிரிக்கெட் ரசிகர்கள் வருத்தம் தெரிவித்தனர். (இ)

## இலங்கை...

தனர். மஹல ஜெயவர்த்தனா 77 ஓட்டங்களையும் ரஸல் ஆனோல்ட் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும், அரவிந்தடிசில்வா 27 ஓட்டங்களையும், சங்ககார 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியஅணி வீரர்களான சகீர கான் மூன்று விக்கெட்டுக்களையும், அகார்கர், அணில் கும்பிளே, ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

50 ஓவர்களில் 223 ஓட்டங்களைப் பெற்று ஐ.சி.சி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றும் நோக்கோடு இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான செவாக், மொங்கியா ஆகியோர் களம் இறங்கினர். இந்திய அணி 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை சமிந்தவாசின் பந்தில் தினேஷ் மொங்கியா ஆட்டமிழந்தார். செவாக்குடன் இணைந்து ஆட டெண்டுல கர் கள மிறங்கி ஆடத்தொடங்கிய வேளை மழை பெய்யத் தொடங்கியது. அத்துடன் ஆட்டம் முடிவுக்கு கொண்டு வரப பட்டு இரண்டு அணிகளும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்தவேளை இந்திய அணி 8.4 ஓவர்களை நிறைவு செய்து ஒரு விக்கெட் இழப்பிற்கு 38 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றி பெற்ற அணிக்கான 3 லட்சம் அமெரிக்க டொலர் இரு அணிகளுக்கும் சமனாக பகிர்ந்தளிக்கப்பட்டது.இப் பரிசுத் தொகையை ஐ.சி.சி தலைவர் மல்கம்கிரே வழங்க இரு அணித் தலைவர்களும் பேற்றுக் கொண்டனர். இவ் ஆட்டம் தொடர்ந்து நடைபெறாததால் சிறந்த வீரர் சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கான பரிசு வழங்கப்படவில்லை. (ந-5)

## கஞுத்துறை...

வாதிகளின் பொய்யான உறுதி மொழிகளால் தாம் ஏமாற்றப்பட்டதாகவும் இதனால் விரக்தியின் விளிம்பிற்கே தாம் வந்தவிட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## 18,19வது...

கமலசபேசனுக்கு பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த மனுக்கள் மீதான விசாரணையின் தீர்ப்பு இம் மாதம் மூனறாம் வாரத்தில் பாராளுமன்றில் அறிவிக்கப்படவுள்ளது. இதேவேளை மேற்படி சட்ட மூலங்களிற்கு எதிராக 32 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (த)

## 14 வருடங்கள்...

பான தகவல் தெரிந்திருந்தும் அவற்றை தெரிவிக்காமல் விட்டமை, விடுதலைப் புலிகள் தொடர பான வீடியோ நாடாக்களை வைத்திருந்தமை ஆகிய குற்றச் சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப் பட்டு இருந்தன.

சந்தேக நபர்களுக்கெதிராக அவர்களது ஒப்புதல் வாக்கு மூலத்தை தவிர ஏனைய சாட்சியங்கள் எதுவும் இல்லாமையினால் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் அவரகள மீதான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப் பட்டு விடுதலை. செய்யப்பட் டனர். பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாக சந்தேக நபர்கள் மீது 22 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)


அன்பு மாணவர்களே!
உங்கள் வலம்புரியில் மிகவிரைவில்
எதிர் பாருங்கள்.

யாழ் போதனா வைத்தியசாலை -மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு-


எதிர் பாருங்கள்.

பிரபல ஆசிரியர்களினால்
தயாரிக்கப்பட்ட க.பொ.த(சா/த)
மாணவர்களுக்கான மாதிரி
வினாத்தாள்கள் விடைகளுடன்.

மிக விரைவில்

# தீரா நினைவுகளோடு

மாதமொன்று சென்றது | வருடமொன்று கழிந்தது





உடலோடு 1933-06-03 உடல் கழற்றி 2002-09-01

**சோதிமுத்து முருகேசு**

உடலோடு 1939-11-13 உடல் கழற்றி 2001-10-05

**முருகேசு அரியமலர்**

காலையும் வெந்தது
மாலையும் வெந்தது
ஆறாப்புண்ணின் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின் நினைவு

674,பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்

[5959]

## யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோயில்



**மண்டலாபிஷேக பூர்த்தியும்**
**நவோத்ர சகஸ்ர**
**சங்காபிஷேகமும்[1008]**
**02-10-2002(புதன் கிழமை)**

**இன்று:** 01.10.2002. (செவ்வாய்) மாலை 5.30மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகின்றன.

**நாளை:** 02-10-2002 (புதன்) காலை 8.00 மணியளவில் சங்காபிஷேகம் ஆரம்பமாகும். மாலை 5.30மணிக்கு வசந்த மண்டப பூசையும் தொடர்ந்து விநாயகப் பெருமான் திருப்பூந்தண்டிகையில் வீதியுலாவும் இடம்பெறும்.

இங்ஙனம்
பிள்ளையார் பணியில் நிற்கும்
ஆலய நிர்வாகம்.

[5958]

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்க வனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.